04TH JULY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 81 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com

# காஸாவில் இஸ்ரேல் தாக்குதல்;
# வரலாற்றில் கொடூரமான இனப் படுகொலை

## சர்வதேச நிறுவனங்கள் பல உடந்தை
## ஐ.நா.அறிக்கையாளர் பரபரப்பு தகவல்

காஸாவில் இஸ்ரேல் நடாத்தி வரும் மிலேச்சத்தனமான படு பயங்கரமான தாக்குதல்கள் வரலாற்றில் மிகக் கொடூரமான இனப் படுகொலை என ஐ.நா அறிக்கையாளர் பிரான்ஸிஸ்கோ அல்பேன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வில் கருத்துத் தெரிவித்த அவர் இந்த மிலேச்சத்தனமான இனப் படுகொலைகளுக்கு டஜன் கணக்கான

02ம் பக்கம்பார்க்க...

## பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள், உணவுப் பெட்டிகளுக்குத் தடை

அமைச்சர் பிமல் ரத்னாயக்க



உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பிளாஸ்டிக் உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட பொருட்களை சந்தைக்கு கொண்டு வருவதை தடுக்க

02ம் பக்கம்பார்க்க...

## மு.கா. எம்.பியாக அப்துல் வாஸித்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எம்.எஸ். அப்துல்

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டில் வன்முறைகள் அதிகரிப்பு; சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுங்கள்

### சஜித் பிரேமதாச அரசிடம் வேண்டுகோள்!



நேற்று இரவு கல்கிஸ்சை கடற்கரையில் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது. இன்று கந்தானைப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரொன்று பலியாகியுள்ளது.

நாட்டில் சிறிது காலமாகவே தொடர்ச்சியாக கொலைகள் நடந்து வருகின்றன.

இது குறித்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பி, அறிவுறுத்தல் விடுத்தும், இந்த

03ம் பக்கம்பார்க்க...

## பிரபல ஊடகவியலாளர் போதல ஜயந்தவிடம் 50 மி. நஷ்டஈடு கோரும் முஜிபுர்

### மன்னிப்பு கோருகிறார் போதல ஜயந்த!

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தொடர்பாக தவறான செய்தியொன்றை வெளியிட்ட பிரபல ஊடகவியலாளர் போத்தல

03ம் பக்கம்பார்க்க...

## காஸா மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட கோதுமை மாவில் போதைவஸ்து

இஸ்ரேல் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க ஒத்துழைப்புடன் செயற்படும் காஸா ஹியூமனிடேரியன் பௌண்டேஷன் மூலம் காசா மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட கோதுமை மா உறைகளில் ஒக்சி கொடோான் என்ற போதைப் பொருள் பகர்ந்தளிக்கப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

03ம் பக்கம்பார்க்க...

## ஊடகவியலாளர் மப்ரூக் மீது தாக்குதல்

### முஸ்லிம் மீடியா போரம் கண்டனம்



(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான

02ம் பக்கம்பார்க்க...

## சமூக நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பினால் சுஹைலை விடுவிக்க தீவிர முயற்சிகள்!

### நீதியமைச்சருடன் பேச்சு நடாத்தவும் திட்டம்

03ம் பக்கம்பார்க்க...

## பெருந்திரளானோர் பங்கேற்புடன் பதியுதீன் மஹ்மூத் நினைவுப் பேருரை!



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அல் - அஸ்லாப் முன்னோர் நினைவு மன்றம் ஏற்பாடு செய்த நாட்டிற்றும் சமூகத்திற்கும்

02ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச சமூகவியல் சங்கத்தின் உறுப்புரிமையிலிருந்து இஸ்ரேல் இடைநிறுத்தம்

(எம்.ஐ.அப்துல் நஸார்)

காஸாவில் இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு எதிர்வினையாற்றும் விதமாக மொரோக்கோ சமூகவியலாளர்கள் மற்றும் உலகளாவிய சிவில் சமூகத்திடமிருந்துவரும் அழுத்தங்களைத் தொடர்ந்து சர்வதேச சமூகவியல் சங்கம் (ஐ.எஸ்.ஏ) இஸ்ரேலிய சமூகவியல் சங்கத்தின் உறுப்புரிமையினை

03ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி
Amãna Bank

### பிளாஸ்டிக்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

சந்தை ஆய்வுகளில் ஆபத்தான நிலைமைகள் பதிவாகியுள்ளதால், அடுத்த இரண்டு மாதங்களில் கடுமையான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் பாதுகாப்பிற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### பெருந்திரளானோர்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளப்பரிய சேவையாற்றிய கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களின் நினைவுப் பேருரை நிகழ்வு நேற்று திங்கற்கிழமை கொழும்பு 10இல் உள்ள தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் அமைப்பின் தலைவர் எம்.எச்.எம். நியாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய சூரா கவுன்சிலின் தலைவருமான எம். எம்.சுஹைர் கலந்து கொண்டார் கௌரவ அதிதியாக தொழில் அதிபர் மாஹிர் ஹாஜியார் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், பாடசாலை மாணவர்கள், அஹதிய்யா பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அஸ்ஸெய்க் இன்ஹாம் இஸ்ஹாபின் கிராஅத்துடனும் கம்பளை ஸாஹிரா கல்லூரி மாணவிகளின் வரவேற்பு கீதங்களுடனும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அமைப்பின் தலைவர் எம்.எச்.எம். நியாஸ் தலைமையுரையாற்றினார், அறிமுக உரையை அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.இஸட் அஹமட் முனவ்வரும், கலாநிதி மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் தொடர்பான ஆய்வுரையை கொழும்பு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளரும் அல்-முஹ்ஸின் விஞ்ஞானக் கல்லூரியின் நிருவாகப் பணிப்பாளருமான எம்.எம்.எம்.ஸாபிர் வழங்கினார், அதனைத் தொடர்ந்து பதியுத்தீன் மஹ்மூத் தொடர்பாக கவிஞர் கல்ஹின்ன பௌமி ஹலீம்டீன் இயற்றிய பாடல் காணொலியும், நஜிமுதீனின் கருத்துரைகளும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பிரதம அதிதியின் உரை இடம்பெற்றது. நன்றி உரையை அமைப்பின் செயலாளர் ஹில்மி முஹம்மத் வழங்கினார் நிகழ்வினை ஹிஸாம் சுஹைல் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வின்போது அல் அஸ்லாப் முன்னோர் நினைவு மன்ற அங்கத்தினரால் நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டதுடன் அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மு.கா...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாஸித் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு விசேட வர்த்தமானி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் இராஜினாமா செய்ததைத்தொடர்ந்து அப்துல் வஹீத்துக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் 10ஆவது பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் வெற்றிடத்தை வாஸித் நிரப்புவார் என தேர்தல் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

### ஊடகவியலாளர்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யூ.எல். மப்றூக் மீது அட்டாளைச்சேனை பிரதேச அரசியல்வாதி ஒருவரினால் கடந்த ஜூலை 2ஆம் திகதி புதன்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை முஸ்லிம் மீடியா போரம் வன்மையாக கண்டிக்கிறது.

“என்னைப் பற்றி எப்படி நீ செய்தி எழுதுவாய்” எனக் கேட்டவாறே ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளதுடன் இது தொடர்பாக பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடு ஊடகவியலாளர்களின் ஊடகப் பணிக்கு விடுக்கும் நேரடி அச்சுறுத்தலாகும். அத்துடன் ஊடக சுதந்திரத்தினையும் கேள்விக்குரியாக்கின்றது.

ஊடகவியலாளர் மப்றூக் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைப் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏனைய ஊடகவியலாளர்கள் மீது இடம்பெறாததை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

அதனால், இந்த சம்பவத்துடன் நேரடியாக தொடர்புடைய அனைவரும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் என மீடியா போரம் வேண்டுகோள் விடுக்கிறது. பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு உரிய நீதி கிடைக்க தேவையான நடவடிக்கைகளை பதில் பொலிஸ் மா அதிபர் முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றது என்று போரத்தின் தலைவர் என். எம். அமீன், பொது செயலாளர் சாதிக் ஷிஹான் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டு ள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### காஸாவில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நிறுவனங்கள் உதவி வருவதாகவும் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

ஆயுத விற்பனை நிறுவனங்கள்,தரகு நிறுவனங்கள்,பல் பொருள் அங்காடிகள்,எரிசக்தி மற்றும்அதனோடினைந்த நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் என பல தரப்பட்ட நிறுவனங்களும் அமைப்புகளும் காஸா மக்களைக் கொன்று குவிக்கும் மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு உடந்தையாக உள்ளதாகவும் பரபரப்பான அறிக்கையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் வழமை போல் இஸ்ரேல் இந்த அறிக்கையை மறுதளித்துள்ளது.இது ஆதாரமற்ற பொய்யான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை என்றும் இதனை நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் பொருளாதார மீட்சி நம்பிக்கைக்குரிய அறிகுறிகளைக் காட்டுகிறது

## சர்வதேச நாணய நிதிய செயல் தலைவர் கெனஜி ஒகமுரா

இலங்கையின் அதிகாரிகள் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கினால், முன்னேற்றத்தை தக்கவைத்துக் கொள்ளமுடியும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய நிர்வாகக் குழுவின் துணை நிர்வாக இயக்குநரும் செயல் தலைவருமான கென்ஜி ஒகமுரா இதனை தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



**பணவீக்கம் குறைவு**

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெற்ற திட்டத்தின் கீழ் இலங்கையின் பொருளாதார மீட்சி முன்னேற்றத்திற்கான நம்பிக்கைக்குரிய அறிகுறிகளைக் காட்டுகிறது.

இலங்கையின் சீர்திருத்த முயற்சிகள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன. முக்கிய சீர்திருத்தங்கள் உறுதியான முடிவுகளைத் தரத் தொடங்கியுள்ளன என்றும் ஒகமுரா குறிப்பிட்டுள்ளார்.

சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றன,பொருளாதார வளர்ச்சி வலுவடைகிறது, பணவீக்கம் குறைவாகவே உள்ளது, இருப்புக்கள் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் அதிகாரிகள், தமது நிதியுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்று கென்ஜி ஒகமுரா வலியுறுத்தியுள்ளார்.


அண்மைய ஆண்டுகளில் கடுமையான சவால்களை எதிர்கொண்ட ஒரு பொருளாதாரத்திற்கு இந்த முன்னேற்றங்கள் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**இருதரப்பு ஒப்பந்தங்கள்**

இலங்கையின் மீட்பு உத்தியின் ஒரு மூலக்கல்லான கடன் மறுசீரமைப்பு செயல்முறை நிறைவடையும் தருவாயில் உள்ளது. எனவே, மீதமுள்ள அதிகார பூர்வ மற்றும் வணிக கடன் வழங்குநர்களுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை இறுதி செய்வதன் முக்கியத்துவத்தை ஒகமுரா வலியுறுத்தியுள்ளார்.

வரி விலக்கு கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், இணக்கத்தை அதிகரித்தல் மற்றும் பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட நிலையான வருவாய் திரட்டலின் அவசியத்தையும் ஒகமுரா வலியுறுத்தினார்.

இலங்கையின் பொருளாதார திறனைத் திறக்க கட்டமைப்பு சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள அவர், ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் பல்வகைப்படுத்தலை அதிகரிக்க நிர்வாக சீர்திருத்தங்களை தொடர்ந்து செயல்படுத்தவும், வர்த்தக-வசதி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நாணய நிதிய நிர்வாகக் குழுவின் துணை நிர்வாக இயக்குநரும் செயல் தலைவருமான கென்ஜி ஒகமுரா வலியுறுத்தியுள்ளார்.



## சர்வதேச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடைநிறுத்தியுள்ளது.

ரபாத்தில் அமைந்துள்ள முகமது வீ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஐந்தாவது ஐ.எஸ்.ஏ மாநாட்டில் இஸ்ரேல் பங்கேற்பிற்கு பரவலாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.




சர்வதேச சமூகவியல் சங்கம் கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், இஸ்ரேன் தாக்குதல்கள் நடவடிக்கைகளை “காஸாவில் பலஸ்தீன மக்ககளுக்கு எதிராக செய்யப்பட்ட இனப்படுகொலை செயல்கள்“ என இவ்வமைப்பு வருணிப்பதற்கு அமைவாக இவ்வுறுப்புாமை நீக்கம் பிரதிபலிக்கிறது என ஐ.எஸ்.ஏ அறிவித்துள்ளது, மேலும் இஸ்ரேலிய சமூகவியல் சங்கம் பலஸ்தீனத்தில் நிலவும் மனிதாபிமான நெருக்கடியைக் கண்டிக்கத் தவறியதையும் ஐ.எஸ்.ஏ மேற்கோள் காட்டியுள்ளது.

“காஸாவில் பலஸ்தீன மக்களின் இனப்படுகொலைக்கு எமது பொது எதிர்ப்பின் ஒரு பகுதியாக, இஸ்ரேலிய பொது நிறுவனங்களுடன் எந்த நிறுவன ரீதியான உறவுகளையும் நாம் பேணவில்லை“ என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

“காஸாவில் நிலவும் துயரமான சூழ்நிலைக்கு இஸ்ரேலிய சமூகவியல் சங்கம் தெளிவான கண்டனத்தை வெளியிடாததற்கு நாங்கள் வருந்துகிறோம். தற்போதைய நிகழ்வுகளில் இஸ்ரேலின் பங்கேற்பிற்கு பரவலாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையினால் நிருவாகக் குழு இஸ்ரேலிய சமூகவியல் சங்கத்தின் உறுப்புரிமையினை இடைநிறுத்த முடிவு செய்துள்ளது.“

மொரோக்கோ கல்வியாளர்கள் மற்றும் இஸ்ரேலின் கல்வி மற்றும் கலாச்சார புறக்கணிப்புக்கான மொரோக்கோ பிரச்சார அமைப்பு (ஆயுஊடீஜ) உட்பட மனித உரிமை அமைப்புகளின் தொடர்ச்சியான எதிர்பினைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. இஸ்ரேலிய கல்வியாளர்களுக்கு வழங்கப்பட்ட அழைப்புகளை திரும்பப் பெறுமாறு மொராக்கோ சமூகவியல் சங்கத்தை இந்த பிரச்சார அமைப்பு ஏலவே வலியுறுத்தியிருந்தது, இஸ்ரேலிய பங்கேற்பினை அங்கீகரிப்பது அதன் ஆக்கரமிப்பு மற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் என்பவற்றினை ஆதரித்து அவற்றிக்கு உடந்தையாக இருப்பது போன்றதாகும் எனவும் அவ்வமைப்பு வலியுறுத்தி இருந்தது.

எனினும், அனைத்து தரப்பும் இந்த உறுப்புரிமை நீக்கத்திற்கு உடன்படவில்லை. சமூகவியல் பேராசிரியர் ஜமால் பாசா உறுப்புரிமை நீக்கத்தினை ஒரு கருத்தியல் மீறல் என்று விவரித்தார். “விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞானிகளை அரசியல் மற்றும் கருத்தியல் மோதல்களுக்குள் இழுப்பது சமூகவியல் சங்கத்தின் நோக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது,“ என தெரிவித்தார்.

கல்விச் சுதந்திரம், ஒழுக்கம்சார்ந்த பொறுப்பு மற்றும் போர்க்காலச் செயற்பாட்டு எல்லைகள் தொடர்பான ஆழமான பிளவுகளை இந்த விவாதம் அம்பலப்படுத்தியுள்ளது. இஸ்ரேலிய பங்கேற்பை எதிர்த்த அமைப்புக்கள், காஸாவில் இராணுவ நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களில் அமைப்பின் தனிநபர்கள் அங்கம் வகிப்பது நீதி மற்றும் சர்வதேச சட்டத்தின் கொள்கைகளை மீறுவதாக வாதிட்டனர்.

“ஆக்கிரமிப்பு மற்றும் சட்டவிரோத குடியேற்றத்தில் ஈடுபடும் ஆட்சியாளர்களின்“ பிரதிநிதிகளை ஒரு பெரிய சர்வதேச கல்வி நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிப்பதில் பல்கலைக்கழகம் உடந்தையாக இருப்பதாக தேசிய உயர்கல்வி ஒன்றியத்தின் மொரோக்கோ பிரிவு, தெரிவித்துள்ளதோடு “ஆழ்ந்த கவலையையும்“ வெளிப்படுத்தியுள்ளது. மொரோக்கோ கல்வியாளர்களை போர்க்குற்றங்களுக்கு ஆதரவளிப்பவர்களாகக் கட்டுவதற்கு எடுக்கப்படும் முயற்சியாக இதனை கருதுவதோடு தமது கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

காஸாவில் இஸ்ரேலின் செயற்பாடுகள் தொடர்பில் உலகளவில் எதிர்ப்புகள் அதிகரித்து வரும் நிலையில், இந்த நிகழ்வு கல்விசார் இராஜதந்திரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் சுட்டிக்காட்டுகின்றது, முன்னணி சர்வதேச அமைப்புகள் நிறுவன இணைப்புகளின் அரசியல் தாக்கங்களையும் அவற்றுடன் வரும் பொறுப்புகளையும் கருத்தில் கொள்ளத் தொடங்கியுள்ளன என்பதை இது காட்டுகின்றது.

## நாட்டில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

விடயத்தில் அரசாங்கத்திடம் எந்த பதிலும் இல்லை.

நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றங்களை குறைப்பது எதிர்ப்பது குறித்து அரசாங்கத்திற்கு எந்த யோசனையும் இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் எந்த வேலைத்திட்டமோ அல்லது தொலைநோக்குப் பார்வையோ இல்லாததொரு அரசாங்கமே இன்று நாட்டில் காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொலைகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. பாதாள உலகக் கும்பல்கள், போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள், பல்வேறு அடக்குமுறை கும்பல்கள், அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் கும்பல்கள் இந்நாட்டில் தொடர்ந்து கொலைகளைச் செய்து வருகின்றன. இந்த குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. சமூகத்தில் வாழும் உரிமை இல்லாது போயுள்ளது. வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்ய அரசாங்கம் தவறிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ராமஞ்ஞ மஹா பீடத்தினால் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உபசம்பதா புண்ணிய நிகழ்வு இன்று (03) அநுராதபுரம் கலாவெவ பிரதேசத்தில் இடம்பெற்றது. 74 ஆவது தடவையாக இடம்பெற்ற இவ்வருட நிகழ்வில் 400 பிக்குகள் உபசம்பதா பெற்றனர். இப்புண்ணிய இந்நிகழ்வில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

- தேசிய பாதுகாப்பு ஆபத்தில்.

தேசிய பாதுகாப்பு குறித்து டியூசன் எடுப்போம் என வீராப்பு பேசிய அமைச்சர்களால், தற்போது இயலாமைக்கு மத்தியில் இருந்து வரும் அரசாங்கத்தால், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியாதுபோயுள்ளது. அரசாங்கம் மெத்தனப் போக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. இந்தப் படுகொலைகளும் துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், இச்சம்பங்கள் தேசியப் பாதுகாப்பைப் பாதிக்காது என்று அரசாங்கம் தொடர்ந்து கூறி வருகிறது. வீடுகளிலும், வீதிகளிலும், வேலைத்தளங்களிலும், நீதிமன்றத்திலும் கூட துப்பாக்கிச் சூடு நடக்கும் நிலைக்கு நாடு வந்துள்ளது. இதைத் தடுக்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லாமையினால் காட்டுச் சட்டமே கோலோச்சி காணப்படுகின்றது. சட்டத்தின் ஆட்சி இல்லாது போய், கொலை செய்யும் கலாச்சாரம் பரவி காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## சமூக...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு எட்டு மாதங்களாக சிறைப்படுத்தப்பட்டிருக்கும் மாவனல்லை சுகைல் என்பவரை விடுவிப்பது தொடர்பாக சமூக நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பு நீதியமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. அதே நேரம் இவரை விடுவிப்பதற்காக நீதிமன்றத்தில் பிணை மனு ஒன்றை தாக்கல் செய்யவதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் முக்கியஸ்தரும், தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை உறுப்பினருமானெ அர்கம் முனீர் தெரிவித்தார்.

மாவனல்லை ஹெம்மாத்துக்கமயைச் சேர்ந்த இளைஞர் சுகைல் தெஹிவளையில் கைது செய்யப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்ட பின் பின்பும் மீண்டும் மாவனல்லையில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுகைலை விடுவிப்பது தொடர்பாக சட்டத்தரணி இஜாஸ் ஹிஸ்புல்லாஹ் ஆஜராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## காஸா...


**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கோதுமை மாவுடன் இந்தப் போதை வஸ்த்து கண்டுபிடிக்கப்பட்டமையானது அதனைப் பெற்றுக்கொண்ட 4 பேர் செய்த முறைப்பாட்டிலிருந்து தெரியவந்துள்ளதாக இஸ்ரேல் பத்திரிகையும் தகவல் வெளியிட்டுள்ளது. இதே நேரம் இந்த உதவி பகிர்ந்தளிக்கப்படும்போது இஸ்ரேலியப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் 62 பேர் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பிரபல...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஜயந்த வுக்கு எதிராக முஜிபுர் ரஹ்மான் வழக்கொன்றை தாக்கல் செய்து 50 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு கோரியுள்ளார். முஜிபுர் ரஹ்மான் கொழும்பு மாநகரசபையில் செய்த ஒரு கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக செய்தி ஒன்றை பிரசுரித்தமை சம்பந்தமாக முஜிபுர் ரஹ்மான் தனது சட்டத்தரணியின் ஊடாக கோரிக்கை விடுத்து மனு ஒன்றை தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார். குறிப்பிட்ட முஜிபுர் ரஹ்மானுக்கும் அந்த கொடுக்கல் வாங்கலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென உறுதி செய்யப்பட்ட நிலையில் போத்தல ஜயந்த தனது கருத்தை வாபஸ் பெற்று மன்னிப்புக் கோரியுள்ளார். இது தொடர்பாக முஜிபுர் ரஹ்மான் இதுவரை இறுதியான முடிவொன்றையும் எடுக்கவில்லையென அவருக்கு நெருங்கியவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. போத்தல ஜயந்த கடந்த அரசாங்க காலத்தில் படையினரால் தாக்கப்பட்டு உயிர் தப்பிய நிலையில் அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறார். இந்த நிலையில் அவர் அண்மையில் முஜிபுர் ரஹ்மான் கொழும்பு மாநகர சபையில் ஒரு ஒப்பந்தம் ஒன்றை செய்து பணம் செலுத்தவில்லை என்று செய்தி ஒன்றை வெளியிட்டு இருந்தார். இது தொடர்பாகவே முஜிபுர் ரஹ்மான் தனது நிலைப்பாட்டை விளக்கி அவ்வாறு எதுவும் இல்லை என்று தெரிவித்திருந்தார்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JULY 04 - FRIDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# முஸ்லிம் பிரச்சினைகள் தீர்வுக்கு சகல தரப்பும் ஒன்று பட வேண்டும்

வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் இரு மாதங்களுக்கு ஒரு முறை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து ஆராயும் கூட்டம் நடைபெற்று வருகின்றது. முஸ்லிம் சமூகம் நாடளாவிய ரீதியில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை முஸ்லிம் சிவில் அமைப்புகள் இக்கூட்டத்தில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வுகளைப் பெற எடுத்திருக்கும் முயற்சியானது பாராட்டத்தக்கது. அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் கூட இல்லாத நிலைமையில் இப்படியானதொரு முயற்சியை தொடர்வது பாராட்டுக்குரியது. அமைச்சர் விஜித ஹேரத் முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சனைகளை நன்கு அறிந்த ஒரு அரசியல்வாதி. அதன் காரணமாகத்தான் இம்முறை அவர் தனது பிரதேசமான மினிவாங்கொட யில் நகர சபை உதவித் தலைவராக முஸ்லிம் பெண் ஒருவரை நியமித்துள்ளார். இந்த முன்மாதிரி உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இதற்கு முன்பும் கூட அவர் கலாச்சார அமைச்சராக இருக்கும்போது ஹிஜாபுக்காக பாடசாலை மாணவர்களுக்கு குரல் கொடுத்தது அனைவருக்கும் நினைவில் இருக்கும். இந்த இரு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டம் கடந்த புதன் அன்று வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சமய விவகார அமைச்சர் ஹினிதும சுனில், பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி மற்றும் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் உட்பட அரசாங்க முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இங்கு முஸ்லிம் சமூகத்தின் முக்கியமான பிரச்சனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுப்பதன் மூலமே இந்த கூட்டத்தை பற்றிய நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்படும். உதாரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் முஸ்லிம் சமூகம் அனுபவித்து வந்த அனேக சலுகைகள் மற்றும் உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றுதான் மகர பள்ளிவாசல் பிரச்சனை. இந்த பிரச்சனையானது நீண்ட காலமாக தீர்வு காணப்படாமல் கைவிடப்பட்டிருக்கிறது. அங்கே வாழ்கின்ற முஸ்லிம்கள் தமது தொழுகையை நிறைவேற்றுவதற்கு ஒரு பள்ளிவாசல் இல்லாமையினால் தான் இந்த பள்ளிவாசல்களை தொடர்ந்து நாம் வைத்திருக்க வேண்டும் என வேண்டுகின்றனர்.

ஆகவே இது தொடர்பாக நிறைவான தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுப்பது அவசியம் ஆகும். சமய விவகார அமைச்சர் சுனில் இது குறித்து, விசேடமாக இந்த பள்ளிவாசல் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருக்கின்றார். உண்மையிலேயே அரசாங்கத்தில் இருக்கின்ற முஸ்லிம் உறுப்பினர்களும் அமைச்சர்களோடு சேர்ந்து இப் பிரச்சனையை தீர்ப்பதற்கு தனது ஈடுபாட்டினை காட்ட வேண்டும். கலந்துரையாடலின் பின் இது மறக்கடிக்கப்படக்கூடாது. அதனை உரிய முறையில் பின் தொடர்ந்து இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, முனீர் முழப்பர் மற்றும் பாராளுமன்றத்தில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் உறுப்பினர்கள் இந்த பிரச்சினையை கவனத்தில் கொண்டு அவர்களுக்குள்ளேயே கலந்துரையாடி இதற்கான தீர்வுகளை பெற்று தர வேண்டும். முஸ்லிம் சிவில் அமைப்புகளது கூட்டத்தில் அதற்கான பிரதி பலன்களை தெரிவிக்க வேண்டும். அதுவே மிக முக்கியமானதாகும். அதன் மூலம்தான் இப் பேச்சு வார்த்தைகள் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். முஸ்லிம் சிவில் அமைப்புகளும் தமது சமூகத்தில் உள்ள முக்கிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகள் என்ன என்பதை முன்வைக்கும் பட்சத்தில் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படும். ஆகவே இந்த கலந்துரையாடலை தொடர்ந்து பலனளிக்கும் முறையில் நடத்துவதற்கு முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் சிவில் அமைப்புகள் ஏலவே கலந்துரையாடி இவற்றைத் தீர்க்கும் வழிகளை பற்றியும் தமது ஆலோசனைகளை முன்வைத்தால் இந்த பிரச்சினைகள் தொடர்ந்து இழுபறியில் இருக்காது. இதுகுறித்து முஸ்லிம் இயக்கங்கள் அக்கறை காட்ட வேண்டும்.

துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குர்ஆன் பிரதிகள் சம்பந்தமாகவும் இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஒரு தெளிவான முடிவை எடுத்து இதற்கான தீர்வும் எட்டப்பட வேண்டும். குர்ஆன் பிரதிகள் அங்குமிங்குமாக வீசி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இது உண்மையிலேயே குர்ஆனை அவமதிக்கும் ஒரு செயலாகும். எனவே இது தொடர்பாகவும் சரியான விளக்கங்களை அதிகாரிகள் தெரிவித்து குர்ஆன் பிரதிகளை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்க அல்லது அவற்றை திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்த பிரச்சனை நீடிக்க இடமளிக்கக்கூடாது. அதே நேரம் இஸ்லாமிய புத்தகங்கள் சம்பந்தமாகவும் இன்னும் ஒரு தெளிவான முடிவு இல்லாமல் இருக்கின்றது. இறக்குமதி செய்யப்படும் புத்தகங்கள் மற்றும் இஸ்லாமிய நாடுகளில் இருந்து வருகை தருகின்ற விரிவுரையாளர்கள் சம்பந்தமாகவும் ஒரு உறுதியான தீர்மானம் இல்லாமல் இருக்கின்றது. அதற்கான ஒரு வழிகாட்டலை அமைத்து இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முஸ்லிம் சிவில் அமைப்புகளுடன் அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகள் ஓர் இருவராவது அடிக்கடி சந்திப்புகளை ஏற்படுத்தி இப்ப பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிகாட்ட வேண்டும்.

அதுவே இன்றைய தேவைப்பாடு. இது தொடர்பாக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம் அக்கறையோடு செயல்படுவது அவசியமாகும். ஹஜ் காலப்பகுதி மற்றும் பேரிச்சம்பழ பங்கீடு போன்றவை மட்டும் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணி அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் கலாச்சார ரீதியான பிரச்சினைகளுக்கு முஸ்லிம் திணைக்களத்தின் ஊடாக சில நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் உள்ளது. அதன் மூலம் அரசியல் தலைமைத்துவங்களுக்கு வழி காட்ட முடியும். இந்த விடயத்தில் அக்கறையுடன் செயல்படுவதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதே எமது அபிப்பிராயமாகும்.

முஸ்லிம் அமைச்சர் ஒருவர் கூட இல்லாத நிலையில் யார் இதற்கு பொறுப்பு என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. எனவே இருக்கின்ற இரண்டு பிரதான பதவிகளை வகிக்கின்ற பிரதி சபாநாயகரும், தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சரும் அதிகாரிகளோடு இணைந்து கலந்துரையாடி இந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். எனவே இந்த இருவரிடத்திலும் ஒரு பெரும் பொறுப்பு இருக்கின்றது. ஏனெனில் இதற்கு முன்பெல்லாம் முஸ்லிம் அமைச்சர்கள் இருந்திருக்கின்றார்கள். இப்படியான ஒரு நிலைமை இல்லை. இந்நிலையில் பிரதி அமைச்சரும் பிரதி சபாநாயகரும் கைகோர்த்து பிரச்சினைகளை அடையாளம் கண்டு கலந்துரையாடி அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது மிக முக்கியமாகும். குறிப்பாக கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு இக்குழு கவனம் செலுத்த வேண்டும். தெகிவளை மீலாத் வித்தியாலய பிரச்சனை பல மாதங்களாக தீர்க்கப்படாமல் இருக்கின்றது.

அதேபோன்று நாட்டின் முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதுபோன்ற பிரச்சனைகளை ஆராய்ந்து அதைப்பற்றி உரிய இடங்களுக்கு ஆவணங்களை சமர்ப்பித்து தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு இவர்கள் நடவடிக்கை எடுப்பது முக்கியமாகும். குறிப்பாக பிரதி அமைச்சர் முனீர் முழப்பரும், பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியும் இந்த விடயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டு முஸ்லிம்கள் அது பிரச்சனைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காக ஒன்றுபட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# தலிபான் ஆட்சிக்கு ரஷ்யா அங்கீகாரம்

ஆப்கானிஸ்தானில் 2021 ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து, மாஸ்கோ தலிபான்கள் அமைப்பை தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் இருந்து நீக்கிய பின்னர், அந்த அரசாங்கத்தை முறையாக அங்கீகரித்த முதல் நாடாக ரஷ்யா நேற்று (3) அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் புதிதாக நியமிக்கப்பட்ட தூதர் குல் ஹசன் ஹாசனிடமிருந்து சான்றுகளைப் பெற்றதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சரகம் அறிவித்தது.



ஈரான் இஸ்ரேல் யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக கொழும்பில் உள்ள ஈரான் தூதுவராலயத்தில் வைக்கப்பட்டிருந்த அனுதாப புத்தகத்தில் முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா, மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் முக்கியஸ்தர்கள் கையொப்பமிட்டனர். முஸ்லிம் கவுன்சில் தலைவர் என், எம் அமீன், செயலாளர் எம் டி எம் ரிஸ்வி மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளர் இர்சாத் ஏ காதர், உப தலைவர் எப். எம் றிபாஸ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் அதிகாரபூர்வ அங்கீகாரம் உற்பத்தித் திறன் கொண்ட இருதரப்பு ஒத்துழைப்பை வளர்க்கும் என்று அமைச்சரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் வெளியுறவு அமைச்சரகம் இதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை என்று கூறியது, மேலும் தலிபான் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தகி இந்த முடிவை வரவேற்று, "மற்ற நாடுகளுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு" என்று கூறியுள்ளார்.

இதுவரை எந்த நாடும் தலிபான் நிர்வாகத்தை முறையாக அங்கீகரிக்கவில்லை என்றாலும், அந்தக் குழு பல நாடுகளுடன் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது மற்றும் சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகளுடன் சில இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியது. இருப்பினும், தாலிபான் அரசாங்கம் உலக அரங்கில் ஒப்பீட்டளவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது, பெரும்பாலும் பெண்கள் மீதான அதன் கட்டுப்பாடுகள் காரணமாகவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவின் ஆலோசனையின் பேரில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தலிபான் அரசாங்கத்தை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கான



# வாள்' யுகம் தொடக்கம் 'ஏஜ ஹைப்பர் ஸொனிக் ஏவுகணை' யுகம் வரை ஒரு சிறு பார்வை

ஹரீஸ் ஸாலிஹ்

மனித தோல்வியின் பிரதிபலனே யுத்தம்! அன்பு, ஒத்துழைப்பு, கூட்டுறவு சரியும் போது அது வன்முறையாக வெடிக்கிறது. ஒரு அதிகார வர்க்கத்தை கொன்று விட்டு இன்னொரு அதிகார வர்க்கம் ஆட்சியை கைப்பற்றுகிறது. இந்த அழிவும் , இழப்பும் , காயமும் பல தலை
முறைகளுக்கு நீடித்த போதிலும் போர்கள் தொடர்கின்றன.
யுத்தத்தின் பற்கள் ஆயுதங்கள். ஆயுதங்கள் யுத்தத்தை திட்டமிடுன்றன. அவை பிறகு நினைவுச் சின்னங்களாக மாறுகின்றன.
வாளுக்கும், ஈட்டிக்கும் பழகி இருந்த ரோம சாம்பிராஜ்யத்தை உத்மானியர் களின் வெடி மருந்து, பீரங்கிகள் தோற்கடித்தன. பிறகு ஐரோப்பாவின் தொழிற்புரட்சியின் யுத்த உபகரணங்கள் உத்மானிய சாம்பிராஜ்யத்தை வீழ்த்தியது. முதலாம் உலக மகா யுத்தத்தில் இயந்திர துப்பாக்கிகளும், இரசாயன ஆயுதங்களும், நச்சு வாயுக்களும், தொடர்ந்து இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ரேடார்களும், யுத்த டாங்கிகளும், யுத்த விமானங்களும், அணு குண்டும் யுத்தங்களின் வரை விலக்கணத்தையும், யுத்த தர்மங்களையும் மாற்றியமைத்ததாக வரலாறு கூறுகிறது. பெரும்பாலான இந்த யுத்த ஆயுதங்கள் இப்போது நூதனசாலைகளின் காட்சிக்கு மாத்திரம் அடங்கியதாக இருக்கிறது. எமது டிஜிட்டல் யுகத்தில் மிகவும் துல்லியமாக தாக்கி அளிக்கக் கூடிய யுத்த கப்பல்கள், ஸ்டேல்த் விமானங்கள், க்ஷரூஸ் மிஸை ல்கள், ஸ்டலைட் கைடட் மிஸை ல்கள் போன்றன எத்தனையோ





நாடுகளை, நாகரீகங்களை, வரலாறுகளை தவிடு பொடியாக்கி விட்டதை நாம் கண்டோம்.
நேற்று வரை சைபர் யுத்தம் மூலம் எதிரி நாடுகளின் செயற்பாடுகளை சீர்குலைத்தல், நவீன ஸட்டலைட் உதவியுடன் நாடுகளை உளவு பார்த்து துல்லியமாக தாக்கி அழித்தல், ஏஜ மற்றும் ட்ரோன் உதவியுடன் பாரிய தாக்கங்களை நடத்துதல், தாக்க வரும் ஏவுகணைகளை வானிலே வைத்து அழித்தல் போன்றன இடம் பெற்றன.
ஆனால் இன்று நாம் போரின் பரிணாம வளர்ச்சியில் ஒரு வியக்கத்தக்க பாய்ச்சலை காண்கிறோம்! இப்போது நடை பெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் இடையில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் 'ஏஜ ஹைப்பர் ஸொனிக் ஏவுகணை' களின் தோற்றம் முன்னைய பல ஆயுதங்களுக்கு பென்ஷன் கொடுத்து மியூசியங்களுக்கு அனுப்பி வைக்கும் காரியத்தை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது.
ஆயுதங்களின் ஒவ்வொரு தலை முறையும் யுத்தங்களுக்கு புது முகங்களை கொடுத்து, அதிகாரத்தையும் செல்வாக்கையும் மாற்றியமைத்திருக்கின்றது.

# விண்மீன் மண்டல 'பால் வழி'





கண்ணுக்கு எட்டக்கூடிய பிரபஞ்சத்தின் (Universe) விட்டம் சுமார் 93 பில்லியன் ஒளி ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஒளி ஆண்டு எனப்படுவது ஒரு செக்கனுக்கு 300,000 இலட்சம் கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும் ஒளி, ஒரு வருடத்துக்கு செல்லும் தூரம் ஆகும். இது 9.461 ட்ரில்லியன் கிலோ மீட்டர்களாகும். கடந்த 47 வருடங்களாக விண்ணில் பயணித்துக் கொண்டிருக்கும் "Voyager-2" விண் கலம் இது வரை 20 பில்லியன் கிலோ மீட்டர்கள் பயணித்திருப்பது வெறுமனே 0.0022 ஒளி ஆண்டுகள் மாத்திரமே என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்! பூமிக்கு மிகவும் அண்மையில் உள்ள Proxima Centauri எனப்படும் நட்சத்திரம் பூமியில் இருந்து 4.25 ஒளி ஆண்டு தொலைவில் இருக்கிறது.
'பால் வழி' (Milky Way galaxy) என அழைக்கப்படும் எமது சூரிய குடும்பம் அடங்கி இருக்கும் நட்சத்திர மண்டலத்தில் மாத்திரம் சுமார் 100 முதல் 400 பில்லியன் வரையான நட்சத்திரங்கள் உள்ளன என்றும் இது மாதிரியான சுமார் 2 ட்ரில்லியன் விண்மீன் மண்டலங்கள் (Galaxies) எமது பிரபஞ்சத்தில் உள்ளன என்றும் விண்வெளி ஆய்வுகள் கூறுகின்றன. ஆக சுமார் 200 sextillion (200,000,000,000,000,000,000,000) நட்சத்திரங்கள் எமது பிரபஞ்சத்தில் உள்ளன!
எமது பூமியும், சூரிய குடும்பமும் இருப்பது 'பால் வழி' யின் 'Orion Arm' எனும் பகுதியில் ஆகும்.
இந்த கை, பால்வழி மையத்திலிருந்து (Galactic Center) சுமார் 26,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. பால் வழியின் இந்த Orion Arm மற்றும் Galactic Center பகுதியை காணக்கூடிய தினங்கள் இருக்கின்றன. இக்காலங்களில் விண்வெளி ஆர்வலர்கள் (Astro Photography) இவற்றை படம் பிடிக்க மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். குறிப்பாக அமாவாசை யின் நடு இரவுகளில் பால் வழியின் Orion Arm மற்றும் Galactic Center ஆகிய பகுதிகளை வெற்றுக் கண்களால் காணலாம்.
இப்படங்களில் இருப்பது குவைத் பாலைவன நடுவில் (Darkest Place in Kuwait) ஒளி மாசடையாத (Light Pollution) பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட படங்களாகும். ஒளி உள்ள நகர்ப்புற பிரதேசங்களில் இவ்வாறான காட்சிகளை காண முடியாது.









# ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அரசுக்கு அழுத்தம் கொடுத்தாரா?


எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோர்கர் டக்கின் இலங்கைக்கான விஜயத்தின் போது வடக்கிலும் தெற்கிலும் இருந்து பலவிதமான எதிரலைகள் வெளிப்பட்டதால் ஆணையாளர் ஒருவகையில் அசந்து போகும் நிலை எற்பட்டது எனலாம்.

2025.06.23 ஆம் திகதி நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பிரதமர் ஹிரினி அமரசூரிய உட்பட அமைச்சர்கள் உள்ளடங்கிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளை சந்தித்தது போன்றே வடக்கில் கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்கள் நிகழ்த பின்னர் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பான அதிர்வலைகளையும் நேரடியாக பார்வையிட முடிந்தது. ,றுதிக்கட்ட போரில் வழிந்து காணாமலாக்கப் பட்டவர்களது துயரங்கள், செம்மணி புதை குழிக்குள் ,ருப்பவர்கள் யார், புதைக்கப்பட்ட நாசகாரிகளை கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம், 2015 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அமுலாக்கம் என்று பல விடயங்கள் தொடர்பாக மக்களால் முன்வைக்கப்பட்ட வேண்டு கோள்களையும் நிதானமாக அவதானிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஆணைாயளருக்கு ஏற்பட்டது.

மத்திய கிழக்கில் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டு பாரிய இழப்புக்களை இரு நாடுகளும் சந்தித்து வருகின்ற நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைக்கான விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

அரேபிய தீபகற்பத்தில் பாலஸ்தீனர் களின் தாயக மண்ணில் யூதர்களுக்கான தனி நாடாக பலவந்தமாக இஸ்ரேல் உருவாக்கப்பட்ட நாளில் இருந்து பாலஸ்தீனர்களது மனித உரிமைகள் அப்பட்டமான முறையில் மீறப்பட்டு வருகின்றது. அங்கு ,துவரையில் அமைதி, சமாதானத்தை நிலைநாட்டவும் ,ஸ்ரேல் மூலம் மீறப்பட்டு வருகின்ற மனித உரிமைகளை பாதுகாத்து உறுதிப்படுத்தவும் எந்தவிதமான ஸ்தீரமான நடவடிக் கையும் எடுப்பதற்கு திராணி இல்லாத ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக உலக அரங்கில் இஸ்லாமிய நாடுகளிடம் இருந்து நீண்ட காலமாக கடுமையான விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலான கடுமையான மோதலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ரம்ப் இடைத்தரகராக செயல்பட்டு முடிவுக்கு கொண்டு வந்து யுத்த நிறுத்தத்தை பிரகடணப்படுத்தியதாக அமெரிக்காவே உலகிற்கு பரைசாட்டி இருக்கின்றது. ஆனால் ஏற்கனவே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ மற்றும் ட்ரம்ப் ஆகிய இருவரும் இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தியே முடியுமானால் ஈரானை தட்டிப் பார் என்று ஆலோசனை வழங்கி அமைதியின்மைக்கும் யுத்தம் ஒன்றுக்கும் இதே ட்ரம்ப் வழிவகுத்ததாக சர்வதேச ஊடக அறிக்கைகள் கூறுகின்றன.

ஆனாலும் ஈரான் இஸ்ரேலின் தாக்குதலை கண்டும் காணாமலும் இருந்துவிடும் என்று கருதியபோதும் வீர வேங்கையாக வெளிப்பட்ட ஈரான் தகுந்த தருணத்தில் இஸ்ரேலுக்கு அதனிடம் இருந்த பலவிதமான நவீன ஏவுகனைகள் மூலம் பதிலடி கொடுத்ததால் அமரிக்காவும் இஸ்ரேலும் நிலைகுழைந்து போய்விட்டன. ஈரானின் கடுமையான தாக்குதல் தந்திரேபாயங்களை எதிர்கொள்ள முடியாத இஸ்ரேலால் ஈரானின் முன்னேற்றத்தையும் எழுச்சியையும் கட்டுப்படுத்த அமெரிக் காவிடம் கையேந்தியதால் இரண்டு வாரத்தில் முடிவு என்று கூறியவர் இரண்டே நாளில் ஈரான் மீது பலவந்தமாக தாக்குதல் நடத்தி அந்நாட்டில் அணு ஆயுத உற்பத்திக்கான அனைத்து சாத்தியமான வழிகளையும் நாசப்படுத்தி அழித்து விட்டதாக அறிவித்தார். அதன் பின்னர் யுத்த நிறுத்தம் ஏற்பட்டதாகவும் அமெரிக்கா சர்வதேசத்திற்கு அறிவித்தது. ஆனாலும் அமரிக்க ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கை காரணமாக அவரது ஆதரவு அதிகரிக்கவில்லை. மாறாக உலக அரங்கில் மக்கள் மத்தியிலும் நாடுகளிடமும் கடுமையான அதிருப்தி மேலிட்டதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் ஈரான் குறித்து இஸ்ரேல் தெரிவிக்கையில் அந்நாடு யுத்த நிறுத்தத்தை மீறிவிட்டது, போர் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளை மீறி விட்டது, ,ஸ்ரேலுக்கு ஈரானின் தாக்குதலால் ஏற்பட்ட நாசத்திற்கும் அழிவுகளுக்கும் நஷ்டஈடு செலுத்த வேண்டும், ஈரான் போர்க்குற்றம் புரிந்துவிட்டது என்றேல்லாம் புலம்பிக் கொண்டிருக்கின்றது.

ஆனாலும் இஸ்ரேல் என்ற நாடு பலவந்தமாக உருவாக்கப் பட்ட நாளில் இருந்து இஸ்ரேல் இதைத்தான் பாலஸ்தீனம் மீதும் அயலில் இருக்கும் அரபு நாடுகள் மீதும் செய்து கொண்டு வருகின்றது. அதுவும் அமெரிக்காவும் ஈஸ்ரேலின் இத்தகைய முரட்டுச் சுபாவ போக்கிற்கு உறுதுணையாக இருந்து வருகின்ற நிலையில் இஸ்லாமிய நாடுகளை அடக்கி வைக்கும் முயற்சிகளை திட்டமி ட்ட அடிப்படையில் இந்த அமெரிக்காவும் இஸ்ரேலும் மேற்கொண்டு வந்திருக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலையில் இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது செய்து வந்திருக்கின்ற நாசத்திற்கும் அழிவுகளுக்கும் முதலில் நஷ்டஈடு செலுத்த வேண்டும். அங்கு மீறப்படுகின்ற மனித உரிமைகளுக்கு பதிலளிக்க வேண்டும். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கண்காணிப்பு அதிகாரிகள் முழு அளவில் இஸ்ரேலின் தாக்கு தலால் பாதிக்கப்பட்டும், படகோலை செய்யப்பட்டும், இருப்பிடங்களை ,ழுந்து தட்டுத் தடுமாறும் மக்க்ள குறித்து அவதானம் செலுத்தி பாலஸ்தீன மக்களுக்கு நீதி, நியாத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மனித உரிமைகள் என்ற விடயத்தை மிகவும் துச்சமாக மதித்து வரும் இஸ்ரேலைப் போன்றே அமெரிக்காவும் அத்துமீறல்களையும் ஆக்கிரமிப்புக்களையும் எந்த நாட்டின் மீதம் எப்போதும் மேற்கொள்ளும் வல்லமை பெற்றவைகளாக உள்ளன. அதிலும் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ரம்பின் போக்கு முன்னைய ஜனாதிபதிகளின் போக்கை விட மிகவும் வேறுபட்டதாக ,ருக்கின்றது. ,வ்வாறான ஒரு நிலையில் மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்காவுக்கு எந்தவிதமான கரிசணையும் இல்லை என்றே கூற வேண்டும். அதற்கு ஈரான் மீதான் அத்துமீறல் பலமான ஆதாரமாகும். அவ்வாறிருக்க பலம்பொருந்திய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பாக எதிர் முரணான போக்கை கடைபிடிக்கின்ற நிலையில் சர்வதேச மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வந்திருக்கின்றார்.



இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ,றுதிக் கட்ட போரின் போது மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வெளிப்படையாகவே அப்பாவி தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதாக ஏற்கனவே 10 வருடங்களுக்கு மேலாக ஜெனீவாவில் மனித உரிமைகள் தொடர்பான அமர்வுகளின் போது நிறைவேற்றப்பட்ட அறிவுறுத்தல்கள் உள்ளன.

ஆனால் அவை அமுல்படுத்தல் தொடர்பாக திருப்திப்படும் நிலை ,ல்லை என்பதே தமிழர் தரப்பு வாதமாகும். அதனால் ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையாளர் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட போது "அணையா விளக்கு" மூன்று நாள் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் ,றுதிக் கட்ட போர் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்தும் வலிந்து ந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக நீதி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கை மீது சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என் றுஅணையாளரை வலியுறுத்தும் செயற்பாடுக்ள முன்னெடுக்கப்பட்டன. இதற்கு பிரதானமாக ,லங்கையின் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்துள்ள போதும் பொறுப்புக் கூறல் மந்த கதியில் நடக்கின்றது, சர்வதேுச சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளே தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகின்ற பயங்காரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் அதிலும் சாதகமான முற்னேற்றங்கள் இல்லை. அதே இந்த பயங்கரவாத தடைச் சட்டம் அமுலில் இருப்பதும் இலங்கையில் சில சந்தர்ப்பங்களில் மனித உரிமை மீறல்களுக்கு பிரதான காரணமாக அமைகின்றது. கைதுகளின் போது அப்பாவிகள் நீண்ட காலம் தடுத்து வைக்கப் பட்ட பின்னர் குற்றச்சாட்டுக்களை நிரூபிக் போதிய ஆதாரங்கள் இல்லை என்று விடுதலை செய்யப்படுகின்றனர். ஆனால் அவ்வாறு கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டிருந்தவரின் மனித உரிமைகள் மீறப்பட்டாலும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமைகள் உள்ளன. அதனால் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றுவது தொடர்பாக கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறாயினும் இலங்கையில் 2019 ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம்கள் தொடர்பான மிக மோசமான நிலைப்பாட்டை ஆட்சியாளர்களே கொண்டிருந்த போது முஸ்லிம் சமூகத்தினது இன, மத, அரசியல், கலாசார உரிமைகள் மீறப்பட்டு அவை மனித உரிமை மீறல்களாக வெளிப்பட்டன. ஆனாலும் ஆட்சியாளர்களால் அதற்கு எதிராக எந்தவிதமான நடவடிக் கைகளும் எடுக்கப்படவில்லை. அதிலும் கொரொனா வைரஸ் தொற்ற கொவிட் காலத்தில் இஸ்லாமிய மத, கலாசார மரபுகளை மீறி முஸ்லிம்களது உடல்களை எரிக்கப்பட்டமை குறித்து தொடர்ந்தும் அதிருப்திகள் நிலவி வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விஜயம் ,லங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

பாதிக்கப் பட்டவர்களால் அதுபற்றிய அறிக்கைகளும் மகஜர்களும் முன்வைக்கப்பட்டு ள்ளன. அத்துடன் தமிழ் தரப்பை மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்து கலந்து ரையாடல்களை செய்துள்ளார். அரச தரப்பினர் மனித உரிமைகள் பாதுகாப்புடன சம்பந்தப்பட்ட விடயங்களில் பூரண அக்கரையுடன் செயற்படும் என்று அறிவித்தி ருக்கின்றது. அதே நேரம் மனித உரிமைகள் பாதுகாப்புக்கு தடையாக இருக்கின்ற சட்ட ஏற்பாடுகள், கட்டுப்பாடுகளைக் கூட நீக்க வெண்டும் என்று ஆணையாளர் தெரிவித்ததாக அறிய முடிகின்றது.

ஆனாலும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள் யாரும் ஆணையாளரை சந்தித்து முஸ்லிம் சமூகம் கடந்த காலங்களில் எதிர்நோக்கி மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்ப ட்ட பிரச்சினைகள், தற்போதும் தொடர்ந்துகொண்டிருக்கும் வெளிக்கு தெரியாத விடயங்கள் தொடர்பாக பலமான முறைப் பாடுகள் செய்யப்படவில்லை என்று முஸ்லிம் தரப்பில் அதிருப்திகள் காணப்படுகின்றன. ஆனாலும் 1990 ஆம் ஆண்டு வடக்கில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்ந்து எதிர்நோக்குகின்ன பிரச்சினைகள் தொடர்பாக கரிசனை செலுத்துமாறு யாழ்ப்பாணத்தில் சில சிவில் சமூக பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணை யாளரிடம் கேரிக்கை விடுத்ததாக அறிய முடிகின்றது. அத்துடன் முஸ்லிம் சமூகம் கடந்த 2015 ஆம் ஆண்டின் பின்னர் இருந்து எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் உள்ளன. அத்துடன் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் எற்பட்ட பிரச்சினைகள் உள்ளன.

இத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடும் சந்திப்பொன்று 2025.0625 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றிருக்கின்றது. இந்த சந்திப்பிற்கு அகில இலங்கை ஜம்,யதுல் உலமா , ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில், ஸ்ரீ லங்கா சூரா சபை, ஸ்ரீ.ல.மு. மீடியா போரம் உள்ளிட்ட பல முஸ்லிம் சமூகம் சார்ந்த சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். அரச தரப்பு பிரதிநிதிகளாக அமைச்சர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், புத்தசாசன மற்றும் மத விவகாரங்க ளுக்கான அமைச்சர் சுனில் செனவி, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி மற்றும் பிரதி அமைச்சர் முனீர் முலப்பர் உட்பட உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். இந்த சந்திப்பின் போது முஸ்லிம் பிரதிநிதிகள் மஹர ஏகல பள்ளி வாசல் விவகாரத்திற்கான தீர்வு, முஸ்லிம் தாதியரின் உடை தொடர்பான விடயங்கள், இஸ்லாமிய நூல்களின் இறக்குமதியில் இருந்து வருகின்ற கட்டப்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடி உள்ளனர்.

இத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் கடவனம் செலுத்தி உரிய தீர்வுகளை வழங்கும் என்று நம்பிக்கை தெரிவித்ததாக சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிநிதி ஒருவர் கூறினார்.

# கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் புத்தளம் ஸெய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலையில் வெற்றிகரமாக முன்னெடுப்பு



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளம் ஸெய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலையில் பல்வேறு விடயங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. "செயல்களை முன்னெடுப்போம், பொறுப்புடன் செயற்படுவோம்" எனும் மகுட வாசகங்களோடு இத்திட்டம் துரிதமாக செயல்படுத்தப்பட்ட தோடு விழிப்புணர்வு வீடியோக்களை காட்சிப்படுத்தல் போன்ற திட்டங்கள் வகுப்பு ரீதியாக கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டன. கிளின் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் தொடர்பாக காலைக் கூட்டம் மற்றும் மார்க்க ரீதியான சொற்பொழிவுகள் மூலமாக மாணவர்களுக்கு தெளிவாக விளக்கமளிக்கப்பட்டன. இத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுக்கும் இந்த செயற் திட்டத்தின் இறுதி நகர்வாக விழிப்பூட்டும் வாசகங்களை கொண்ட பதாகைகள் மாணவர்களால் உருவாக்கப்பட்டு, மாணவர்கள் பாடசாலையை சூழவுள்ள பாதையில் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டனர். பாடசாலை அதிபர் எச்.யூ.எம். எஹியாவின் ஆலோசனையின் பேரில், பிரதி அதிபர் ஏ.ஜே.எப். சாபினாத் மற்றும் உதவி அதிபர் எஸ்.ஐ.எல்.முஸம்மில் ஆகியோரின் வழிகாட்டலின் பிரகாரம் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# அனுராதபுர ஆஸ்பத்திரி கழிவுகளால் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம்



**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையில் நோயாளிகளின் கழிவுகள் மற்றும் சிறுநீர் அடங்கிய கழிவுகளை ஒழுங்கற்ற முறையில் அகற்றுவதால் அப் பகுதியில் ஏராளமான சுகாதார பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நகரின் மத்திய வடிகால் அமைப்பு வழியாக அனுராதபுரம் மல்வத்து ஓயா வில் கலப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இந்த சூழ்நிலை காரணமாக வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றியுள்ள பகுதியில் கடுமையான துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதியில் மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மல்வத்து ஓயா வில் கலக்கும் இந்த மாசுபட்ட நீர் பிரதேச வாசிகளும் அங்கு குளிப்பதற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடும் என்றும் பிரதேச வாசிகள் சுட்டிக்காட்டினர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மனிதகுலம் பாதுகாப்பிற்கான தேசிய அமைப்பின் தலைவர் வணக்கத்துக்குரிய அனுராதபுரம் சோமரத்ன தேரர் இந்த பிரச்சினையை தீர்க்க பொறுப்பு வாய்ந்தவர்கள் உடனாடியாக செயல்படாவிட்டால் விரைவில் இந்தப் பகுதியில் பல சுகாதார பிரச்சினைகள் ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# வேகந்த பள்ளியில் முஹர்ரம் தேசிய புத்தாண்டு நிகழ்வு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

முஸ்லிம் சமய பண்பாட்டலு வல்கள் திணைக்களம் கொழும்பு 02, கொம்பனித் தெருவில் அமைந்துள்ள வேகந்த ஜூம்ஆப் பள்ளிவாசலுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் (ஹிஜ்ரி 1447/2025) இஸ்லாமிய புதுவருட நிகழ்வு கொழும்பு வேகந்த ஜூம்ஆப் பள்ளி வாசலில் (27) கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய நல்லிணக்க பிரதியமைச்சர் முனீர் முழப்பர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில், அல்ஹாபிழ் செய்ட் றிஸ்வி அல்குர்ஆன் ஓதியதோடு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமை உரையாற்றினார்.

ஜம்இய்யத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் மௌலவி அர்கம் நூராமித் இஸ்லாமியப் புதுவருட முஹர்ரம் சிறப்புகள் குறித்து தமிழ் மொழியிலும் கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலை மாணவன் முஹம்மட் சாபித் றிஸ்வான் சிங்கள மொழியிலும் உரையாற்றினர்.

கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலையின் மாணவர்களான அஸ்மிர் அஹமட் சுபைர், முஹம்மட் சாஹிர் நஸார், முஹம்மட் யஹ்யா இம்ரான் ஆகியோரினால் கஸீதா பாடப்பட்டதுடன் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வேகந்த ஜ/ம்ஆப் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் அல்ஹாஜ் நிஸாம் நயீமினால் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.



துஆ மற்றும் ஸலவாத்தினை வேகந்த ஜ/ம்ஆப் பள்ளிவாசலின் பேஷ்இமாம் அல் - ஆலிம் எம். நஸீர் புஹார்தீன் (நஜாஹி) நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், என். நிலூபர், திணைக்கள நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அஷ்ஷேக் முப்தி முர்சி, திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். மிஸார் உட்பட உலமாக்கள் மற்றும் திணைக்களத்தின் அதிகாரிகள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், ஊர் ஜமா அத்தினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாவனல்லையில் முதலைகள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சார ஒன்றுகூடல்



**(பாரா தாஹீர்)**

மாவனல்லை பிரதேசத்தில் உள்ள மகா ஓயா ஆற்றில் அண்மைக் காலமாக முதலைகளின் நடமாட்டம் இருப்பதாக புகைப்படங்கள் மூலம் நிரூபமானதால், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மாவனல்லைக்கு சமூகமளித்தனர்.

இதன் போது மாவனல்லை பிரதேச சபை பணிப்பாளர் நிரோஷா பெர்னாண்டோ தலைமையில் நயாவலை இல்மா வரவேற்பு மண்டபத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இங்கு கேகாலை மாவட்டத்துக்கு பொறுப்பான வனஜீவராசி அதிகாரி பண்டார, முதலைகள் சம்பந்தமாக 26 வருடங்கள் அனுபவமுள்ள விரிவுரையாளர் பிரதீப் ஆகியோர் முதலைப்பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன் வைத்தனர். அதனை தொடர்ந்து முதலைகள் இருக்கும் இடங்களை அடையாளப்படுத்தும் முதல் கட்ட வேலைத்திட்டமாக கலந்தா லோசிக்கப்பட்டது.

இதில் இப்பகுயைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச சபை ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், பள்ளி வாசல் தலைவர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

# மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மெய்வல்லுனர் சம்பியனாக தெரிவு



**(நூருல் ஹுதா உமர்)**

இம்மாதம் 18,19ம் திகதிகளில் (18) கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் நடைபெற்று முடிந்த பாடசாலை களுக்கிடையிலான கல்முனை வலய மட்ட மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் 13 தங்கம், 13 வெள்ளி மற்றும் 8 வெண்கல பதக்கங்களையும் பெற்று வரலாற்றில் முதல் தடைவயாக 26 போட்டி நிகழ்ச்சிகளுக்கு கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பாடசாலை மாணவன் எம். எப். உபைதுல்லாஹ் வலயமட்ட மெய்வல்லுனர் போட்டியில் 18 வயது ஆண்கள் பிரிவில் 100 மீட்டர் , 200 மீட்டர், 400 மீட்டர் ஆகிய மூன்று நிகழ்ச்சியில் முதல் இடங்களை பெற்று தடகள சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், மாணவர்களை வழிப்படுத்தி பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஏ.எம். அப்ராஜ் ரிலா விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் எம்.ஏ.யு. ஷம்லி, ஏ.எம். ஜப்ரான் ஆகியோருக்கு கல்லூரியின் அதிபர் எம்.ஐ.ஜாபீர் (SLEAS), பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் மகிழ்ச்சியுடன் வரவேற்று பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈரான் இஸ்ரேல் போர்

## வெற்றி யாருக்கு...


எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

மத்திய கிழக்கு நாடுகளில் மிகப் பெரிய அளவில் ஆன போர் நடவடிக்கைகள் மூலம் ஒட்டு மொத்த மனித இனமும் அரண்டு போய் இருக்கும் நிலையில் ஈரான் மீது மிகப் பெரிய அளவில் ஆன தாக்குதலை அமெரிக்கா நடத்தியது. இதற்கு முன் இஸ்ரேலிய ராணுவம் 200 க்கு மேற்பட்ட வான் படைகள் மூலம் தாக்குதலை நடத்தி 400 மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இஸ்ரேல் தெஹ்ரான் மத்திய பகுதியில் இருக்கும் ராணுவ சார்பு நிலைகள் மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தியது. 4,000 மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்த நிலையில் போர் உக்கிரமான நிலையை அடைந்தது. இந்த நிலையில் ஈரான் தனது ஏவுகணைகள் மூலம் உச்சபட்ச தாக்குதல் டெல் அவிவ் மீது நடத்த இஸ்ரேல் நாட்டில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் கட்டங்கள் நொருங்கி போனது என்பதே யதார்த்தமான உண்மையாகும். ஆனால் இஸ்ரேல் ராணுவம் மற்றும் அரசு இதுவரையில் 26 பேர் மட்டுமே பலியானதாக உண்மைக்கு புறம்பாக கூறியதாக சர்வதேச நாளிதழ்கள் செய்தியை வெளியிட்டது.

இந்த நிலையில் ஈரான் மீது தனது விமானங்கள் மூலம் கடுமையாக தாக்குதலை இஸ்ரேல் நடத்திய நிலையில் பதில் தாக்குதலை தொடர்ந்து நடத்திய ஈரான் வரலாற்றில் இதுவரை இஸ்ரேலிய ராணுவம் சந்தித்திராத வகையில் மிகப் பெரிய அளவில் ஆன பதில் தாக்குதலை நடத்தி உண்ணாமையில் இஸ்ரேல் அரசு நிலை குழைந்து போனது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் இதுவரை வெறும் 26 பேர் மட்டுமே இறந்ததாக இஸ்ரேலிய அரசும் அதன் உரிமை வாய்ந்த நிறுவனங்களும் தவறான கருத்தை உலகிற்கு எடுத்து சொல்லி வருவதாக பல்வேறு தரப்பினரும் கூறி வருகின்றனர். ஆனால் உண்மையில் இஸ்ரேல் புலி எண்ணிக்கை கற்பனைக்கு எட்டாத அளவில் இருக்கும் என்ற நிலையில் தான் இந்த தாக்குதலை ஈரான் நடத்தியது.

இந்தத் தாக்குதல்கள் குறித்து ஈரான் உச்சத் தலைவர் காமேனி இன்று எக்ஸ் தளத்தில் அடுத்தடுத்து பதிவிட்டுள்ளார். அந்த பதிவு செய்தியில் கத்தாரில் உள்ள அமெரிக்க தளவாடங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதன் மூலம் அமெரிக்காவின் முகத்தில் அறை விழுந்தது. ஆனால் அமெரிக்கா மீண்டும் இது போன்ற தாக்குதல்களை நடத்த கூடும். அதற்கு அமெரிக்கா அதிக விலை கொடுக்க நேரிடும்" என எச்சரித்துள்ளார்.

"அமெரிக்காவை வீழ்த்திய ஈரானின் வெற்றிக்கு என்னுடைய வாழ்த்துகள். ஜியோனிச ஆட்சி முற்றிலும் அழிக்கப்பட்டுவிடுமோ என்று அமெரிக்கா போரில் நேரடியாக நுழைந்தது. ஆக, அதை காக்க தான் அமெரிக்கா நுழைந்தது. ஆனால், ஒன்றையும் சாதிக்கவில்லை".

"இஸ்லாமிய குடியரசு அமெரிக்காவின் முகத்தில் பலமான அறையைக் கொடுத்தது. அமெரிக்காவின் முக்கிய முகாமான அல்-உதெய்த் விமானத் தளத்தை ஈரான் தாக்கி மற்றும் சேதத்தை ஏற்படுத்தியது".

"இந்தப் பகுதியில் இருக்கும் அமெரிக்காவின் முக்கிய மையங்கள் அனைத்தையும் இஸ்லாமிய குடியரசால் நெருங்க முடியும். தேவை ஏற்பட்டால், அதன் மீது நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் மேற்கொள்ளப் படலாம். இனி ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால், எதிரி நிச்சயம் பெரிய விலையை கொடுக்க வேண்டியதாக இருக்கும்".

"ஈரான் சரணடைய வேண்டும் என்று அமெரிக்க அதிபர் கூறினார். இது அமெரிக்க அதிபர் வாயிலிருந்து வெளி வராத அளவிற்கு பெரிய வார்த்தை ஆகும்".



இந்த தாக்குதலில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகள் இணைந்து ஈரான் நாட்டின் மீது மிகவும் கடுமையான தாக்குதலை நடத்தி வந்த நிலையில் கடைசி வரைக்கும் அவர்களால் பணிய வைக்க இயலவில்லை என்பதே உண்மையாகும். ஆனால் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வழக்கமாக இதனைத் மறுத்து வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.

ஈரானின் அணுசக்தி திட்டங்கள் குறித்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடர்ந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அணு ஆயுத உற்பத்தியை முடக்க வேண்டும் என்ற நோக்கில் இஸ்ரேல் கடந்த சில வாரங்களில் தாக்குதல் நடத்தியதையும், அமெரிக்கா மூன்று முக்கிய அணுசக்தி மையங்களை குறிவைத்து தாக்கியதையும் தொடர்ந்து பதிலடி நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த தாக்குதல்களில் ஈரானின் போர்டோவ், நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் அணுசக்தி நிலையங்கள் பெரிதும் சேதமடைந்துள்ளன.

இதனையடுத்து ஈரான் - இஸ்ரேல் இடையே நேரடி மோதல்கள் ஏற்பட்டு, மத்திய கிழக்கு பகுதியில் நிலவிய பதற்றம் இன்னும் தொடரும் சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில், அணுசக்தி ஒப்பந்தத்துக்கான புதுப் பேச்சு வார்த்தையை அமெரிக்க அதிபர் டிரம்ப் அடுத்த வாரம் நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

ஆனால், இதை நிராகரித்த ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அராக்சி, ஈரான் செய்தி சேனலுக்கு அளித்த பேட்டியில், "அணுசக்தி ஒப்பந்தத்துக்கு எங்களால் இன்னும் உடன்பட முடியாது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்கள் எங்களை நம்ப முடியாத நிலைக்கு கொண்டு சென்றுள்ளன. இப்போது பேச்சுவார்த்தை நடத்துவது பயனற்ற ஒன்று. அமெரிக்காவின் இந்த செயற்பாடுகள், நம்மை மீண்டும் எதிர்மறையான முடிவுகளுக்கு இட்டுச் செல்கின்றன," எனக் கூறினார்.

அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் தொடங்குவதில் ஈரான் எச்சரிக் கையுடன் அணுகும் நிலையில், சர்வதேசத் தரப்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி புதிய கவலைகள் எழுந்துள்ளன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரானுடன் புதிய அமைதி முயற்சியில் இறங்க தயாராக இருந்தாலும், தற்போதைய சூழ்நிலையில் அந்த சாத்தியம் மிகக் குறைந்ததாகவே தெரிகிறது. மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் நிலைமை உலக அமைதிக்கு பெரும் சவாலாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் இந்த தாக்குதல்கள் குறித்து பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் அளித்த பேட்டியில், 'அமெரிக்காவின் தாக்குதல்கள் திறம்பட இருந்தாலும், இதன் மூலம் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் வெளியேறினால் அதுவே மிக மோசமான சூழலை உருவாக்கும். அவ்வாறு நடந்தால், அது உலக நாடுகளுக்கு பேரழிவை ஏற்படுத்தும். இந்த ஒப்பந்தத்தைக் காப்பாற்றும் நோக்கில், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்களுடன் அடுத்த சில நாட்களில் பேச்சு வார்த்தை நடத்த உள்ளேன். ஏற்கனவே இதுகுறித்து அமெரிக்க அதிபர் டிரம்புடன் பேசினேன். மீண்டும் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபடுவதைத் தடுப்பதே தற்போதைய முக்கிய நோக்கம்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் எந்தவொரு நிலையிலும் மத்திய கிழக்கு நாடுகளில் வலிமை பெற்று விட கூடாது என்பதில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகள் தங்களால் முடிந்த அளவுக்கு அழுத்தத்தை ஈரான் மீது ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இறுதியில் மிகப் பெரிய அளவில் ஆன போர் நடைபெற்ற நிலையில் யார் வெற்றி பெற்றார்கள் என்கிற விவாதம் சர்வதேச நாடுகள் மத்தியில் சென்று கொண்டு இருக்கிறது.

இஸ்ரேல் என்கிற பேரழிவு சக்தியை துடைத்தெறிய இஸ்லாமிய நாடுகள் மத்தியில் கருத்து உருவாக்கம் ஏற்பட வேண்டும் என ஈரான் தொடர்ந்து முயற்சி செய்து வரும் நிலையில் இந்த போரின் மூலம் ஈரான் வலிமையான சக்தியாக அந்த பிராந்தியத்தில் மாறி வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் நடத்திய தாக்குதலுக்கு பதில் தாக்குதலை தனது ஏவுகணைகள் மூலம் நடத்தியதில் வெற்றி ஈரான் சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பலத்தை மட்டும் அல்லாமல் பாராட்டுதல் தையும் பெற்றுள்ளது.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் ஈரான் வலிமையான ராணுவ சக்தி என்பதை அவர் ஒப்புக்கொண்டார் என்கிற செய்திகள் வெளியாகியுள்ளன.

அதே சமயம் உலகில் யாரும் தங்களை வெற்றி கொள்ள முடியாத சக்தியாக இதுவரை வலம் வந்த இஸ்ரேல் ராணுவம் மற்றும் அதன் கண்டு பிடிப்புகளை ஈரான் தனது வலிமையான ஏவுகணைகள் தாக்குதல் மூலம் அழித்து மிகப் பெரிய அளவிலான சேதாரத்தை அந்த நாட்டின் உள்ளே ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரான் வலிமையான பாலிஸ்டிக், ஹைப்பர் சோனிக் ஏவுகணை களைகள் மூலம் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல்வேறு இஸ்ரேலிய நகரங்கள் அதன் உயர்ந்த கட்டிடங்கள் முழுமையாக ஈரானின் ஏவுகணைகள் மூலம் உருத்தெரியாமல் அழிக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் கடந்த பல்வேறு ஆண்டுகளாக காசாவில் நடத்திய போர் அதனைத் தொடர்ந்து ஈரான் மீது நடத்திய தாக்குதல் மூலம் பல்லாயிரக்கணக்கான கோடி ஷேருபாய் அளவுக்கு நஷ்டத்தை இதுவரை சந்தித்து வந்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதேநேரத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் ராணுவ வீரர்கள் இந்த போரின் மூலம் கொல்லப்பட்டுள்ளனர் ஈரான் தாக்குதல் வாயிலாக நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன.

இஸ்ரேல் சுற்றுலா பயணிகள் மூலம் வரும் வருமானத்தை இழந்து பொதுமக்கள் முழுமையாக நாட்டை வெளியேறும் அபாய கரமான சூழலை முதன் முதலில் சந்தித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் தளவாடங்கள் முற்றிலுமாக ஈரான் அரசின் ஏவுகணை தாக்குதல் மூலம் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் ஈரான் மிகுந்த புகழ் அடைந்துள்ளதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பத்திரிகைகள் செய்திகள் வெளியாகியுள்ளன .

இதற்கிடையில் சவூதி அரேபியா மன்னர் கிங் முஹம்மது பின் சல்மான் உடன் ஈரான் வெளிவிவகார துறை அமைச்சர் மசூத் பெஸஸ்கியான் போர் நிறுத்தம் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு பேசியுள்ளார். அப்போது சவூதி அரேபியா கிங் முஹம்மது பின் சல்மான் எந்தவொரு நிலையிலும் முஸ்லிம் சகோதரத்துவ உணர்வுடன் நாங்கள் நடந்து கொள்வோம் என்றும் சவூதி அரேபியா மண்ணில் இருந்து ஒரு போதும் ஈரான் நாட்டை தாக்கி விட நாங்கள் அனுமதிக்க போவதில்லை என்பதை தெளிவாக தெரியப்படுத்தி உள்ள நிலையில் வருங்கால அரசியல் சூழல் நிச்சயமாக மற்றோரு பரிணாம வளர்ச்சியை நோக்கி பயணிக்க ஆரம்பி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உண்மையில் தற்போது அமெரிக்கா சமாதானம் செய்து ஒரு தற்காலிக போர் நிறுத்தத்தை இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. உண்மையில் எந்த நேரமும் மீண்டும் ஒரு போர் வெடிக்கும் என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

இதற்கிடையில் சர்வதேச அணு ஆயுத ஐ நா வின் சார்பு அமைப்பில் இருந்து ஈரானின் வெளியேறியது பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் மாநகர சபை வரலாற்றில் முஸ்லிம் ஒருவர் பிரதி மேயராக பதவியேற்பு




(இக்பால் அலி )

குருநாகல் மாநகர சபை முதல்வர் ஆனந்த சகபந்து மற்றும் பிரதி முதல் அஸார்தீன் மொய்னுதீன் உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்கின்ற வைபவம் குருநாகல் மாநகர சபையில் இடம்பெற்றது.

குருநாகல் மாநகர சபை ஆணையாளர் அஜந்த குனவர்தன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் நிமல் கருணாரத்ன சமயத் தலைவர்கள் பல்துறை சார் பொறுப்பு நிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குருநாகல் மாநகர முதல்வர் ஆனந்த சகபந்து மற்றும் பிரதி முதல்வர் அஸார்தீன் மொய்னுதீன் தத்ததம் அலுவலங்களில் சமயத் தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் அதிகாரபூர்வ அலுவலகங்களில் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர பை உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் "மனச் சாட்சி" நூல் வெளியீட்டு நிகழ்வு




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஒன்பதாவது பாராளுமன்ற த்தில் பல்வேறு தலைப்புகளில் ஆற்றிய 54 உரைகளை உள்ளடக்கிய "மனச்சாட்சி" என்ற நூல் (25) இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பல்லின மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் மற்றும் ஓய்வுபெற்ற ஜனாதிபதி செயலாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை பாக்கீர் மாக்கார் நிகழ்த்தினார். நூல் குறித்து ஓய்வுபெற்ற சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணி யுமான பாலித பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

நன்றியுரையினை இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெலும்வெவ வெந்நீர் ஊற்று பகுதிகளை அபிவிருத்தி செய்யத் திட்டம்

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

கிளீன் ஸ்ரீ லங்கா செயற்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை வெலிகந்த நெலும்வெவ பகுதியில் உள்ள வெந்நீர் ஊற்றுகளை சூழவுள்ள பகுதியை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த வெந்நீர் ஊற்றுகளை சூழவுள்ள பகுதிகள் முறையாக அபிவிருத்தி செய்யப்படாத காரணத்தால் அங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வதற்கு ஆர்வம் குறைந்துள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் (24) முற்பகல் அந்தப் பகுதியில் இடம்பெற்றதுடன் அங்கு கண்காணிப்பு விஜயமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலில் நெலும்வெவ வெந்நீர் ஊற்றுக்களை அபிவிருத்தி செய்வதன்



முக்கியத்துவம் அதன் சுற்றுலா மற்றும் தொழில்நுட்ப திறன் போன்று அதன் தற்போதைய நிலைமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வெந்நீர் ஊற்றுகளை சுற்றியுள்ள பகுதியில் வனப்பகுதியை அதிகரித்தல் தீவை அழகு படுத்தல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலகுபடுத்தும் வகையில் நிலப்பகுதியில் இருந்து தீவு வரை பாலம் அமைத்தல் போன்ற விடையங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் வெலிகந்த பிரதேச சபை தவிசாளர் டி.டபிள்யூ.வசந்த பேராதனை பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் நிலத்தடி நீரியல் நிபுணர் தர்ம குணரத்ன ஆகியோருடன் கிளீன் ஸ்ரீ லங்கா செயலகம் இலங்கை மகாவலி அதிகார சபை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெலிகந்த பிரதேச செயலகம் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கி வைப்பு




(எம்.ஐ.அப்துல் நஸார்)

புதிய காத்தான்குடி கிழக்கு 167பி கிராம சேவகர் பிரிவில் இயங்கி வரும் சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) கிராம சேவகர் பிரிவின் பலநோக்கு மண்டபத்தில் குழுவின் தலைவர் ஏ.எல்.முனீர் அஹமட் தலைவமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஆர்.எம்.ஐ. ரத்நாயக்க கலந்து கொண்டார் இக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல் கலீல்டீன், கிராம சேவை உத்தியோகத்தர் மபாஸா சுல்பிகார் அலி, சமுர்த்தி உத்தியோகத்தர் மர்சூக்கா றபீக், உபதலைவர் ஏ.எல்.அம்ஜத், உப செயலாளர் ஏ.ஐ.ஏ.அக்பர், சிவில் பாதுகாப்பு குழுவிற்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட சிவில் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை முழுவதிலுமுள்ள சகல மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு உள்ளடங்குமாறு சாதி, மத, பேதமின்றி சிவில் பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டு பொலிஸார் சகல மக்கள் குழுவினருடனும் வாழ்ந்து, செயற்பட்டு மக்கள் வாழ்க்கை தொடர்பாக நன்கு ஆராய்ந்து விளங்கிக் கொண்டு சிவில் பாதுகாப்பு குழு செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சம்மாந்துறை பிரதேச சபை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வசமானது!

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளர் மற்றும் உப தவிசாளர் பதவியை தெரிவு செய்வதற்கான கூட்டம், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் சம்மாந்துறை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பகிரங்க வாக்கெடுப்பு மூலம் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் 9 உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 5 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 2 உறுப்பினர்களும், சுயேட்சை குழுவின் சார்பில் 03




உறுப்பினர்களும் மொத்தமாக 23 உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் பதவிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.நளீம் ஆகிய இருவரும் போட்டியிட்டிருந்தனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர், 7 மேலதிக வாக்கு வித்தியாசத்தில், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வி.வினோகாந் 12 வாக்குகளைப் பெற்று சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இஹலகொட்டியாவ சந்தியில் பேரூந்து தரிப்பிடம் திறந்து வைப்பு

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

அனுராதபுரம் கோவில்பந்தாவ ஸபா அகடமியின் வேண்டுகோளின் பேரில் ரம்பாவ பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட இஹலகொட்டியாவ பிரதேச மக்களின் நன்மை கருதி மிக நீண்ட கால குறைபாடாக விருந்த பேருந்து தரிப்பிடம் அனுராதபுரம் ஊீஆ பார்மசி உரிமையாளர் ஏ.கலீல் ரஹ்மானின் நிதி உதவியுடன் இஹலகொட்டியாவ சந்தியில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த (22) திறந்து வைக்கப்பட்டது.




# கடமைகளைப் பொறுப்பேற்ற பேருவளை பிரதேச சபையின் தவிசாளர் பைஸான் நைஸர்



( பீ.எம்.முக்தார்)

பேருவளை பிரதேச சபையின் புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட பைஸான் நைஸர் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளை (26) பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வு அளுத்கமையில் அமைந்துள்ள பேருவளை பிரதேச சபையின் புதிய கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. எதிர்க்கட்சிகளின் கூட்டணி கட்சிகள் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் இப்திகார் ஜெமீல், முன்னால் அமைச்சர் ராஜித சேனாரத்ன, முன்னால் அமைச்சர் பியல் நிசாந்த, முன்னால் மாகாணசபை உறுப்பினர் செனால் வெல்கம, முன்னால் மாகாணசபை உறுப்பினர் பிரசன்ன சஞ்ஜீவ, அம்ஜாட், முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஸலீம், ஐக்கிய மக்கள் சக்தி உப பொருளாளர் ரூமி ஹாஷிம் மற்றும் முன்னால் பேருவளை பிரதேச சபை உறுப்பினர்கள் என அரசியல் பிரமுகர்கள் அரச அதிகாரிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# பாணந்துறை கவிதா வட்டத்தின் எட்டாவது கவியரங்கில் வெளியூர் கவிஞர்களும் பங்கேற்பு



(சப்ரினா சத்தார்)

பாணந்துறை கவிதா வட்டத்தின் எட்டாவது கவியரங்க நிகழ்வு கடந்த வாரம் பள்ளிமுல்லை அஸ்வர் ஹாஜியார் மண்டபத்தில் ஜீலான் மாணவி ஹுசைன்தீன் ரிஹ்லா தலைமையில் நடைபெற்றது. பாகவத் தலைவர் கலைமதி யாசின் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கவிஞர்களான முன்னாள் அதிபர்களான கலைமதி யாசின், எஸ். எச்.எம் நெளபல், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சத்தார், மஸீதா அன்சார், லைலா அக்ஸியா, மஸாஹிரா கனி, முனாஸ் கனி, கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், சித்திரக் கலைஞன் எம். நளீம், கொழும்பைச் சேர்ந்தவர்களான ராஜா நித்திலன், சிந்தனைப் பிரியன் முஸம்மில், ினுவன்கொட சிவக்குமார், சிவசண்முகம் மற்றும் வெலிப்பன்னை அம்னா அலி ஆகியோர் 'பண்டிகைகள் எதற்காக' எனும் தலைப்பில் கவிதைகள் படித்தனர். கொழும்பு மினுவன்கொட, வெலிப்பன்னை ஆகிய வெளியிடங்களில் இருந்தும் கவிஞர்கள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாக அமைந்தது. ஏ.எல்.எம். அஸ்வர் கருத்துரையோடு நன்றியுரையையும் வழங்கினார்.

# மல்வானை அல் முபாரக்கில் மூன்று மாடி ஆசிரியர் விடுதி திறப்பு








(எம். டி. எம். ஹனபி)

மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையில் சுமார் 45 மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய புதிய மூன்று மாடி ஆசிரியர் விடுதி அண்மையில்(12) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இது இப்பாடசாலையின் பழைய மாணவரும் "ஸஹரா" அறக்கட்டளையின் நிறுவனருமான சமூக சேவையாளர் அல்ஹாஜ் பசூல் ஜிப்ரியின் தனிப்பட்ட நிதியினால் கட்டப்பட்டது.

புதிய மூன்று மாடி ஆசிரியர் விடுதியை அல் ஹாஜ் பசூல் ஜிப்ரி அவர்களே திறந்து வைத்தார்.

இந்த ஆசிரியர் விடுதி 36 ஆசிரியர்களுக்கு குடியிருப்பு வசதிகளை வழங்கும்.

இந்நிகழ்வில் தென்கிழக்கு ஆசிய தவ்வா கவுன்சிலின் தலைவர் அல்ஹாஜ் நிக்கலஸ் சில்வெஸ்டர், களனி கல்வி வலயத்தின் கல்வி (தமிழ்) பணிப்பாளர் மொஹமட் தௌசிர், பாடசாலை உப அதிபர் எம்.எம். மொஹமட் ஸஹரா அறக்கட்டளையின் திட்ட பணிப்பாளர் மொஹமட் ஜெளபர், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் துணைத் தலைவர் அல்ஹாஜ் எம்.எம்.ஏ. இஸ்மாயில், முன்னாள் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி (ஓய்வுபெற்ற) அல் ஹாஜ் எம்.எம்.ஏ. கபூர் பிரபல ஊடகவியலாளர் அல் ஹாஜ் பௌஸான் அப்துல் ஹமீட் உட்பட மற்றும் பல விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

# புலமையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மல்வானை அல் முபாரக்கில் பாராட்டு



கடந்த 2024 ம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியைத் தாண்டி சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு (17) பாடசாலைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வெட்டுப்புள்ளியைத் தாண்டி சித்தியடைந்த மாணவர்களுக்கு பணப் பரிசில்களும் ஞாபகச்சின்னங்களும், 100 புள்ளிகளைத் தாண்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு நெறிப்படுத்தி வழிகாட்டிய ஆசிரியப் பெருந்தகைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

# சிறப்பாக நடைபெற்ற ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழா







(பீ. எம். முக்தார்)

பேருவளை சீனங்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழா (22) பாஸியா ஜும்மா பள்ளிவாயலில் கலாபீட நிர்வாக சபை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.சீ.எம் ஹம்ஸா தலைமையில் நடைபெற்றது.

கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி - யமனி - பீ ஏ) யின் வழிகாட்டலில், கலாபீட அதிபர் மௌலவி எம்.ஏ.எம் அஸ்மிகான் (முஅய்யிதி)யின் மேற்பார்வையில் நடைபெற்ற இவ்விழாவில் அதிதிகள் பைத் ஓதி கலாபீடத்திலிருந்து பள்ளிவாசலுக்கு அழைத்து வரப்பட்டனர். இந்த பட்டமளிப்பு விழாவில் 10 மாணவர்கள் பட்டம் பெற்றதுடன் இவ்விழாவில் பிரதம அதிதகளாக அஷ்ஷைக் அஸ்ஸெய்யித் பஷீர் தங்கள், கௌரவ அதிதிகளாக கலீபத்துல் குலபா அல்ஹாஜ் முஹம்மத் ஸுஹூர் பாரி, அஸ்ஸெய்யித் அஹ்மத் ஷரீப் கோயா தங்கள் (மிஸ்பாஹி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். விஷேட அதிதியாக சீனங்கோட்டை பள்ளிச் சங்க தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் முக்தார் கலந்து கொண்டதோடு, பிரதம பேச்சாளராக புருனே சுல்தான் ஷரீப் அலி பல்கலைக்கழகத்தின் முன்னால் பீடாதிபதி கலாநிதி ஏ.எம். அபுவர்தீன் (அஸ்ஹரி) கலந்துகொண்டார்.

நிகழ்வில் விஷேட மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டதோடு அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

# ஓய்வு பெற்றுச் செல்லும் அல் ஹுமைஸரா அதிபர் இப்ராஹிமுக்கு பாராட்டு



(அஷ்ரப் ஏ சமத்)

பேருவளை அல் ஹுமைசரா தேசிய பாடசாலையின் அதிபர் (அதிபர் சேவை தரம் 1) எம். சி.இப்ராஹீம் அதிபர் இக் கல்லூரியில் 2 வருடங்கள் அதிபராகப் பணியாற்றிய பின்னர் இன்று 01.07.2025 திகதி தனது 60 வயது பூர்த்தி செய்து ஓய்வு பெற்றார்.

அவரது பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் , மாணவத் தலைவர்கள், மாணவர்கள் தமது அதிபரின் பிரியாவிடை வைபவத்திற்கு அவரை பாராட்டி, மாணிக்கல் வழங்கி , பணப் பரிசுகள், வழங்கி பிரியாவிடை வழங்கினார்கள்.

இப்பாடசாலை அவர் பொறுப்பேற்கும் கல்வி முன்னேற்றம் 35 வீதமாக இருந்தது அவர் 68 வீதமாக முன்னேற்றினார். பாடசாலை பரீட்சை முடிபுகள் 35 வீதத்திலிருந்து 68 வீதமாக்கினார் சீரான நிர்வாகத்தினை ஏற்படுத்தினார். இப்ராஹீம் சேர் அவர்கள் பி.ஏ .எம்.ஏ பட்டதாரி இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தரம் அவர் ஏற்கனவே கன்னத்தோட்டை சுலைமானியா தேசிய பாடசாலையில் அதிபர் இருந்து பேருவளை அல் ஹுமைசரா தேசிய பாடசாலைக்கு அதிபராக வரும்படி பேருவளை ஹஜி மார்களின் அழைப்பின் பேரில் பேருவனை அல் ஹுமைசரா தேசிய பாடசாலை பாரமெடுத்தார்.

அவர் அப்பாடசாலையில் தங்கி நின்று மாணவர்களை கல்வியில் ஊக்கப்படுத்தினார். நிர்வாகத்தினை சீர்தூக்கினார்.

ஓட்டமாவடி, ஏறாவூர் அட்டாளைச் சேனை பட்டதாரி ஆசிரியர்களை இங்கு கொண்டு வந்து அல் ஹுமைசரா கல்லூரியிலேயே தங்குவதற்கு இடமளித்து கல்வி புகட்டவும் வசதி செய்து கொடுத்தார்.

இப்றாஹீம் சேரின் 5 பிள்ளைகளில் ஒருவர் சட்டத்தரணி மற்றையவர் யாழ் பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியல் பீடம் பயிலுகின்றனர் பிரிவு ஏனைய பிள்ளைகள் மாவனல்லை பிரதேச பாடசாலையில் கல்வி பயிலுகின்றனர். அவரது மனைவியும் கன்னத் தொட்ட சுலைமானியா பாடசாலையில் ஆசிரியை ஆவார்.




நாச்சியாதீவு பர்வீன்

கடந்த வார தொடர்ச்சி...

## வ.ஐ.ச. ஜெயபாலன்

வன வாசத்தில்
இல்லாதது போன்ற இருப்பில்
கொதிப்புடன் சில நாட் கழிந்தது.
எங்கே எங்கே எமது தேசம்?
எமது இருப்பைத் தனித்தனியாகவும்
எமது இருப்பை அமைப்புகளாகவும்
உறுதிப்படுத்தும் புவிப் பரப்பேது?
இலங்கை அரச வானொலி சொன்னது
“அகதிகள் முகாம்களில் பாதுகாப்பாக
பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளனர்“
அகதிகள் முகாமே எங்கள் தேசமாய்
அமைதல் கூடுமோ?
இலங்கை அரசின் வானொலி
சொன்னது
“அகதிகளான தமிழர்கள் தம்மை
பாதுகாப்புக்காய்
வடக்குக் கிழக்குப் பகுதிகள் நோக்கி
அனுப்பும் முயற்சிகள் ஆரம்ப மென்று“
கப்பல்கள் ரயில்கள் பஸ் வண்டிகளில்
வடக்குக் கிழக்காய்ப் புலம்
பெயர்கின்றோம்.
எங்கே எங்கே எம்தாய் நாடு?
எங்கே எங்கே,
நானும் நிமிர்ந்து நிற்கவோர் பிடிமண்?
நாடுகளாக இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக நம் சமூக இருப்பை
உயர்ந்தபட்சம் உறுதி செய் திடவே.
இங்கு இப்பொழுதில்,
நான் நீ என்பது ஒன்றுமேயில்லை
பிரிவினை வாதிகள்
ஒருமைப்பாட்டையே உரத்துப்
பேசுவோர்
காட்டிக் கொடுப்பவர்
அரசின் ஆட்கள்
கம்யூனிஸ்டுகள் பூர்சுவாக்கள்
யார்தான் முகத்தைப் பார்த்தாரிங்கு.
எமது நிலவுகை இப்படியானதே
எங்கெம் நாடு எங்கெம் அரசு?
எங்கு எம்மைக் காத்திடப் படைகள்?
உண்டா இவைகள் உண்டெனில்
எங்கே?
இல்லையாயின் ஏன் இவை இல்லை?

மசூதிகளாலே
இறங்கி வந்து
என்னை எடுத்துச்
சென்ற மனிதர்கள்
பொறுத்திரு என்றனர்.
விகாரைப் புறமாய்
நடந்துவந்த
காட்டு மிராண்டிகள்
இன்னும் களைத்துப்
போகவில்லையாம்.
அஞ்சி அஞ்சித்
தலைமறைந் திருத்தலே தற்போது
சாத்தியம்.
இதுவே தமிழன் வாழ்வாய்ப்
போகுமோ?
அப்படியாயின்
இதைவிட அதிகம் வாழ்வுண்டே சாவில்!
நிலைவரம் இதுவெனில்
நாங்கள் எங்கள் தாய்நாட்டில் இல்லை
அல்லதெம் தாய்நாடு எம்மிட மில்லை.
சாத்தியமான வாழ்வை விடவும்
அதிகம் வாழ்வு சாவினில் என்றால்
எங்கள் இளைஞர் எதனைத் தெரிவார்?


* * *

முஸ்லிம்போல தொப்பி யணிந்து
விடுதலை வீரனைக் கடத்தி
வருதல்போல்
கொழும்புக் கென்னைக் கொண்டு
வந்தனர்.
விடுதலை வீரனைப் போல்வதை
விடவும்
விடுதலை வீரனாய் வாழ்வதே மேலாம்.
கொழும்பில் தொடர்ந்தஎன் வன வாசம்
கொடிது கொங்கிறீட் வனம்
என்பதனால்,
அமெரிக்க நண்பன் ஒருவனின் வீட்டில்
என்னைப் பதுக்கி வைத்தனராயின்
சொல்க யார்நான் இந்த நாட்டில்?
அந்நியன்கூட இல்லைப் போலும்!
அந்நியனாகவும்,
ஏதுமோர் நாட்டின மாதல் வேண்டுமே!
அமெரிக்க நண்பனும் யப்பான்
தோழியும்
இஷ்டம் போல அளந்தனர் கொழும்பைப்
காட்டு மிராண்டிக் கைவரிசைகளின்
பாதகக் கணங்களைப்
புகைப்படச் சுருளில் பதித்துக்
கொண்டனர்.
அங்கு என் வாழ்வின் பெரியபகுதி
பூனைகளோடும் பறவைகளோடும்!

* * *

வானொலி எனக்கு ஆறுதலானது
பாரதத்தின் கண்களாக
தமிழகம் விழித்து
உலகை உசுப்பும் ஓசையைக்
கேட்டேன்.
சுரங்கமொன்றுள் மூடப்பட்டவர்
தலைக்குமேலே நிலம் திறபடும்
துளைப்பு ஓசை செவிமடுத்தது போல்
புத்துயிர் பெற்றேன்.
உலகம் உள்ளது, உள்ளது உலகம்.

அவஸ்தையில் இலட்சம் தலைகள்
சுழன்ற
அந்தநாட்கள் எதிரிக்கும் வேண்டாம்
பாண்டியன் வாயினில்
கண்ணகியானது
சன்னதம் கொண்ட எனது ஆத்மா.




# உயிர்த்தெழுந்த நாட்கள்...

உலகின் வலிய மனச்சாட்சியினை
வியட்னாம் போரின் பின்னர்
உணர்ந்தேன்.
காட்டு மிராண்டிகள் திடுக்குற
எழுந்தது எங்கும் உலகநாகரீகம்.
இந்தநாட்டில் எனக்கிடமில்லை
இந்த உலகில் எனதிடமுள்ளது.
ஆயின்,
எங்கென் நாடு? எங்கென் நாடு?

* * *

வானொலிப் பெட்டியை வழமைபோல்
திறந்தேன்
வழமை போலவே
ஒப்பாரிவைத்தது தமிழ் அலைவரிசை.
இனவெறிப் பாடலும் குதூகல இசையும்
சிங்கள அலையில் தறிகெட எழுந்தது.
இதுவே இந்த நாட்டின் யதார்த்தம்
சிறைச் சாலையிலே கைதிகளான
எங்கள் நம்பிக்கை ஞாயிற்றின்
விதைகள் படுகொலைப்பட்ட செய்தி
வந்தது கிளாரினட் இசையின்
முத்தாய்ப்போடு. யாரோ எவரோ அவரோ
இவரோ

மறுநாட் காலை அரசு நடத்தும்
“தினச்செய்தி“ என்னும்
காட்டு மிராண்டிகளின் குரலாம் தினசரி
“பயங்கர வாதிகள் கொலை“ எனஎழுதி
எமது புண்ணில் ஈட்டி பாய்ச்சியது.
குற்றம் என்ன செய்தோம் சொல்க!
தமிழைப் பேசினோம்.
இரண்டாம் தடவையும்
காட்டுமிராண்டிகள்
சிறையுட் புகுந்தனர் கொலைகள்
விழுந்தன்
கிளாரினட் இசையுடன் செய்தியும்
வந்தது.

* * *

உத்தமனார், காட்டுமிராண்டித்
தனங்களைத் தொகுத்து
உத்தியோக தோரணையோடு
“சிங்கள மக்களின் எழுச்சி” என்றார்.
தென்னைமரத்தில் புல்லுப் பிடுங்கவே
அரசும் படையும் ஏறிய தென்றார்.
உலகம் உண்மையை
உணர்ந்துகொண்டது.

* * *

துப்பாக்கிச் சன்னமாய் எனது
ஆத்மாவை
ஊடுருவியது,
விமலதாசனின் படுகொலைச் செய்தி.
ஒடுக்குதற் கெதிராய்ப் போர்க்களம்
தன்னில் பஞ்சமர்க்காகவும்
தமிழைப் பேசும் மக்களுக்காகவும்,
உழைப்பவர்க்காகவும்
“ஒருநல்ல கிறிஸ்தவனாய் இறப்பேன்“
என்பாய்.
இப்படி நிறைந்ததுன் தீர்க்க தா×சனம்.
விடுதலைப் போரின் மூலைக்கல்லாய்
உன்னை நடுகையில்,
ஒருபிடி மண்ணை அள்ளிப் போடுமென்
கடமை தவறினேன் நண்ப,
ஆயிரமாய் நீ உயிர்த்தே எழுக!

* * *

“அடக்கினேன்
எழுபத்தொன்றில் கிளர்ச்சியை நானும்
பிரிவினைப் போரை வேரறுத்திடுதல்
ஏன் இவ்வரசுக்கு இயலவில்லை?”
சிறிமா அம்மையார் திருவாய்
மலர்ந்தார்.
“நரபலியாக தமிழ் இளைஞரை
வீடுவீடேறிக் கொன்று குவிப்பீர்“
மறைபொருள் இதுவே –
மீண்டும் இளைஞா×ன் இரத்தம் குடிக்க
மனம் கொண்டாரோ,
காறி உமிழ்ந்தேன்.

* * *

வீட்டினுள் ஜன்னலால் புகுந்து றைபிள்
கலா பரமேஸ்வரனைக் காவு
கொண்டதாம்!
“அப்பாவி“ என்று
முகத்தில் எழுதி ஒட்டிவைத்திருக்குமே! –
முகத்தை யார் பார்த்தார்...
இப்படியாக ஐம்பது தமிழர்கள்
யாழ்ப்பாணத்தில் –
முத்தமிட்டனர், செம்மண் பூமியை.

* * *

பஸ்தரிப்புகளில் தேநீர் சாலையில்
வழி தெருக்களில்
ஒருமைப்பாட்டை உரத்துப் பேசிய,
சிங்கள நண்பரை எதிர்பார்த்திருந்தேன்
முற்போக்கான கோயுங் களோடு
கொழும்பு நகர வீதியை நிறைத்த
சிவப்புச் சட்டைச் சிங்களத் தோழன்
முகங்களைத் தேடிய படிக்கு,
வீதிப்பக்கமாய் மொட்டை மாடியில்
கால்கடுக்க நெடுநாள் நின்றேன்.
எங்கே மறைந்தன ஆயிரம்
செங்கொடி?
எங்கே மறைந்தன ஆயிரம் குரல்கள்?
கொடிகள் மட்டுமே சிவப்பாய்
இருந்ததா?
குரலில் மட்டுமே தோழமை இருந்ததா?
நான் உயிர்பிழைத்தது தற்செயலானது!
முகத்தை யார் பார்த்தார்?

* * *

அடுத்தவாரம் தொடரும்...

# கஹட்டோவிட்டவில் கிராமிய அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம்!







*கஹட்டோவிட்ட 369,369 ஏ கிராமிய அபிவிருத்தி சங்கங்களின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் ஞாயிறன்று (29) பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கஹட்டோவிட்ட 369 ,369 ஏ கிராம சேவகர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.*

*இதில் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்களை கொண்டு 369 மற்றும் 369 ஏ கிராம சேவக பிரிவுகளுக்கான கிராம அபிவிருத்தி சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.*


*கஹட்டோவிட்ட 369 கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராக* MSM *ஹிசாம் அவர்களும், செயலாளராக* MAM *யூனுஸ், உப தலைவராக எம்.ஆர்.எம் வஸீர், பொருளாளராக* K.M.M *ஹிசாம், உப செயலாளராக* M.R. *லுதுபுள்ளாஹ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.*

*இது தவிர நிர்வாக குழு உறுப்பினர்களாக எம்.வை. ஸாத், எம்.எஸ்.வை.நஹ்தி, எம்.ஆர். எம் பாரிக், எம்.எச்.எம் நூமான், எப்.அப்துல் வாஹித், எம்.ஏ.எம் ரஹூபர், ஏ.பி.எம் ஸஊத், எம்.பி.எப் ரஹ்மான், எம். எச்.எம் ஹில்மி, ஏ.ஜி.எம் ஹாரிஸ், எம்.டீ.முனீரா, எம்.என்.எப் ருமைஸா ஆகியோர் அன்றைய தினம் நியமிக்கப்பட்டனர்.*

*அத்துடன் ஆலோசனை குழு உறுப்பினர்களாக பதவி வழியில் 369 கிராம சேவகர், 369 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், .369 சதுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோருடன் எம்.ஆர்.எப் பர்ஸானா, எம்.என். எம் அம்ஜத், ஏ.டபிள்யு.ரிஸ்னா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.*

*அதேபோல 369ஏ கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராக* JAM *ஜவாத் அவர்களும், உப தலைவராக வஸீம் அர்ஹம்,செயலாளராக* K *பயாஸ் மொஹம்மத், உப செயலாளராக* MHM *கியாஸ், பொருளாளராக* MHM *இம்தியாஸ் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.*

*கமிட்டியின் ஏனைய அங்கத்தவர்களாக* JAM *பரூஜ்.* JAM *பராஸ்,* AMM *நுஸ்லி,* MS *கதீஜா,* MFM *றிபாஸ்,* ARM *இக்பால்,* MR *அப்துல்லா,* MZ *ரிஸ்வானுர் ரஹீம்,* MHA *அல்வான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.*




# சமூகத்துக்காக தன்னை அர்ப்பணித்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத்..!

காயிதே மில்லத் மறைந்த கலாநிதி பதியுதீன் இலங்கை முஸ்லிம்களின் மிகச் சிறந்த அரசியல் தலைவராவார். இன்னும் ஒரு கல்லூரியைத் தோற்றுவித்த அதிபராக, ஒரு கல்விமானாக மட்டுமன்றி, கல்வி, ஒலிபரப்புத் துறை, சுகாதாரம், வீடமைப்பு முதலான விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் ஒரு ராஜதந்திரியாகவும் பணியாற்றிய ஒரு ஆளுமையாவார். இச்சந்தர்ப்பத்தில் பதியுதீன் மஹ்மூத் அவர்களின் வாழ்வும் சமூகப் பணியும் தொடர்பாக ஆராய்வது பொருத்தமாகும்.

இவர் 1904 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் திகதி முஹம்மத் நைனா மரிக்கார்–பாதிமா நாச்சியா தம்பதியினரின் 12 ஆவது குழந்தையாக மாத்தறையில் பிறந்தார் சன்மார்க்கப் பற்றும் நன்மதிப்பையும் பெற்ற நிலபுலன்களுக்கு உரிமை கோரும் குடும்பத்திலே பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை மாத்தறையிலும் காலியிலும் பெற்று உயர் வகுப்புகளுக்காக கொழும்பு ஸாஹிராவுக்கு வருகிறார். படிக்கும் காலத்தில் படிப்பிலும் விளையாட்டிலும் சமமாக ஆர்வம் காட்டினார். அடுத்து உயர் பட்டப் படிப்புக்காக இந்தியாவின் அலிகார் பல்கலைக்கழகத்துக்குச் செல்கிறார்.

1931 முதல் 1937 வரையான காலப் பகுதியில் அலிகாரில் படிக்கும் காலத்தில் இவரின் விவாதத் திறனுக்காக 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய பொதுப் பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். பல்கலைக்கழக இதழின் ஆசியராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியதுடன் அலிகார் ஒக்ஸ்போர்ட் மெஸ்டன் பரிசையும் வென்றார் இது தவிர உ.பி. பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பின் தலைவராகவும் 1935ம் ஆண்டு ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லக்னோவில் நடந்த அகில இந்திய மாணவர் மாநாடுகளுக்கு அவர் தலைமை தாங்கினார். அகில இந்திய மாணவர் இயக்கத்தை எற்பாடு செய்தார்.

பதியுதீன் மஹ்மூதின் பேராசிரியரும், தலைமை ஆசிரியருமான முஹம்மத் ஹபீப், தனது மாணவரைப் பற்றி இவ்வாறு விவரித்தார்.

பதியுதீன் 1932 முதல் ஒரு மதிப்புமிக்க மாணவர், தோழர் மற்றும் நண்பர் என எனக்கு மிகவும் நெருக்கமானவர். அவரது கல்வி வாழ்க்கை விதிவிலக்காக அற்புதமானது. பதியுதீன் இரண்டு ஆண்டுகள் (1933-35) என்னுடன் அரசியல் பயின்றார். அவர் மிகவும் நம்பிக்கைக்குரிய மாணவராக, ஆசிரியர்களுக்கு உத்வேகமாக இருக்கும் அரிய, ஆனால் மிகவும் வரவேற்கத்தக்க மாணவர்களில் ஒருவராக என்னைக் கவர்ந்தார். அலிகாரில் சில மாணவர்கள் மட்டுமே தங்கள் திறன்கள் மற்றும் குணாதிசயங்கள் குறித்து இவ்வளவு சிறந்த தோற்றத்தை உருவாக்கியுள்ளனர். அவரது அறிவார்ந்த சாதனைகள், சிறந்த நடத்தைகள் வியக்கதக்கவை.

அலிகாரில் சேர்ந்தபோது, லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் முஸ்லிம் தலைவர்களை இந்திய சுதந்திர இயக்கத்தை ஆதரிக்க மஹ்மூத் வற்புறுத்தினார்.

முதுநிலைப்பட்டதாரியான இளைஞர் பதியுதீன் தன்னை சமூக முன்னேற்றப் பணியில் ஈடுபடுத்திக் கொள்கிறார். முஸ்லிம் லீக் என்ற சமூகநல அமைப்பு அவரை அரவணைத்துக் கொள்கிறது. மிகக் குறுகிய காலத்திலே 1927ஆம் ஆண்டு முஸ்லிம் லீக்கின் செயலாளர் பதவி இவரை அலங்கரிக்கின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான சமகாலப் பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் அக்காலத் தலைவர்களை ஒன்று திரட்டி தீர்வுகாணும் வழிமுறையொன்றை ஆரம்பித்து வைத்தார்.

பிரபுக்களும் செல்வந்தர்களும் மட்டுமல்லாது சதாரண பொது மகனும் முஸ்லிம் லீக்கில் உயர் பதவி வகிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கினார். 1939 ஆம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாட்டைக் கூட்டி சமூகத்தின் உரிமைகள் தொடர்பாக குரல் கொடுக்கும் கலாசாரமொன்றை உருவாக்கினார். ஒரு சமூகம் நாட்டின் முன்னேற்றத்துக்காக அதன் முறையான பங்களிப்பை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசு குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் உர–ிமைகளை வழங்க வேண்டியது அவசியமாகும் என வலியுறுத்தினார். மேலும் அவர் அரசியலுக்கு வர முன்னரே சமூகத்துக்கு விளிப்புக் குரலெழுப்பினார்."

1938 ம் ஆண்டில் காலி முகத்திடலில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பான வைபவமொன்றில் இவர் நிகழ்த்திய உரையில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்கள மொழி அதிகாரபூர்வ மொழியாக இருக்கும் என்பதால், இலங்கை முஸ்லிம்கள் சிங்கள மொழியையும் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டி வரும் என எதிர்வு கூறினார்.

இது செய்யப்பட்டால் சிங்களவர் மத்தியில் முஸ்லிம் தொடர்பான அனைத்துத் தவறான புரிதலும் ஒழிக்கப்பட்டு இரு சமூகத்துக்கிடையே சரியான நல்லிணக்கம் ஏற்படும் என்பதை வலியுறுத்தினார்.

அதே ஆண்டு காலி முகத்திடலில் முஸ்லிம்களின் பிரமாண்டமான கூட்டமொன்றைத் திரட்டி பலஸ்தீன மக்களுக்கு பிரிட்டன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் எனக் கோசம் எழுப்பினார்.

இனி, தேசிய அரசியலில் இவரின் பங்களிப்பு தொடர்பாக அவதானிக்கும் போது, SWRD பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த வேளையில் அவருக்குப் பக்க பலமாக நின்று முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்துக்கு வித்திட்டார். வகுப்பு வாரியான பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக இலங்கை அரசியலில் சனத்தொகை அடிப்படையிலான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்து வெற்றியும் கண்டார். இதன் மூலம் சிறுபான்மையும் சிறுபான்மையாக இருந்த முஸ்லிம்கள் மட்டுமன்றி மலையக தமிழ் மக்களும் கூட நன்மையடைந்தனர். தேசிய மற்றும் சமூகம்சார் அரசியலுக்கு இவர் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

இவர் சுதந்திரக் கட்சி ஆட்சி பீடமேறிய காலங்களில் தனது செல்வாக்கையும் மதிநுட்பத்தையும் பயன்படுத்தி சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கம் களமமைத்தார்.

1960 ஆம் அண்டு பதியுதீன் மஹ்மூத் கல்வி, ஒலிபரப்பு அமைச்சராகப் பதவியேற்றார். இலங்கை வானொலியில் முஸ்லிம் நிகழ்ச்சிக்கான பிரிவொன்றை ஆரம்பிக்கப் பணிப்புரை வழங்கி, அதனை செயற்படுத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இன்றும் இலங்கையில் மட்டுமல்லாது தென் இந்தியாவின் சில பகுதிகளிலும் நாம் காலை-மாலை அனுபவிக்கும் முஸ்லிம் சேவை பதியுதீன் மஹ்மூத் அவர்கள் பெற்றுத் தந்த உரிமையாகும்.

தான் ஒலிபரப்புத் துறைக்குப் பொறுப்பான அமைச்சராக பொறுப்பேற்ற காலத்தில் ஹஜ் பெருநாள் தினத்தில் உரையொன்றை நிகழ்த்தினார். உரைக்கு முன் அவரே தக்பீர் முழங்கினார்.

1950, 60ஆம் தசாப்த காலங்களில் முஸ்லிம்கள் அரசியலில் ஈடுபடுவது அவசியமற்ற ஒன்றாகும் என முஸ்லிம் களில் பெரும்பான்மையானோர் நம்பிய காலம். இஸ்லாமிய சோசலிஸ முன்னணி என்ற துணைக் கட்சியை உருவாக்கி, நாடு பூராகவும் கிளைகளை தோற்றுவித்து முஸ்லிம்களை கௌரவமான அரசியலில் ஈடுபட ஆர்வமூட்டினார்.

இன்னும் சுதந்திரக் கட்சியின் தோற்றத்துக்கும் அக்கட்சி பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கவும் பதியதீன் மஹ்மூதின் ஸாஹிரா வளாகத்துடன் இணைந்த (கம்பளை) வீடே பயன்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக 1972ஆம் ஆண்டு கம்பளை ஸாஹிராவில் அமைச்சர் ரீ.பி. இலங்கரத்தின இவ்வாறு சாட்சி பகர்கிறார். இந்த ஸாஹிரா வளாகம்தான் எமது சுதந்திரக் கட்சியை உருவாக்கவும், கட்சியை உண்ணத நிலைக்குக் கொண்டு வரவும் பல திட்டங்களைத் தீட்டுவதற்கும் களமாக அமைந்தது. நவீன சமுதாயத்தை உருவாக்க நல்ல பல திட்டங்களும் இவ்விடத்திலேயே உருப்பெற்றவையாகும். அவற்றின் மூலமே இந்நாட்டு மக்களுக்கு நாம் சேவை செய்ய பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் வளர்ந்தோம்" இத்தனை பெருமைக்கும் கூஷபதியே; காரணமாகும்" என பலமாகக் கூறினார்.

அவர் கல்வி அமைச்சராகப் பதிவியேற்றதும் வகுப்பு வாரியான முறைமைக்குப் பதிலாக சனத்தொகை அடிப்படையிலான விகிதாசார முறையை செயற்படுத்தி முஸ்லிம் கல்விமான்களின் வளர்ச்சிக்கு வித்திட்டார்.

அக்காலத்தில் அநேகமான முஸ்லிம் பிரதேசங்களில் கலவன் பாடசாலை என்ற பெயரிலே முஸ்லிம் பாடசாலைகள் செயற்பட்டு வந்தது. அவை முஸ்லிம் வித்தியாலங்களாகவும் மகா வித்தியாலயங் களாகவும் மாற்றப்பட்டு சமய அடிப்படையிலான ஒழுக்க விழுமியங்கள் பேணப்பட்டதால் முஸ்லிம் பெண்களும் பாடசாலைக் கல்வியை நோக்கிப் படையெடுத்தனர்.

ஆளணித் தேவைக்காக புதிதாக முஸ்லிம் அதிபர்களும் ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பள்ளிவாசலோடு மட்டும் இருந்த உலமாக்கள் இஸ்லாம் பாட போதனைக்காக நியமிக்கப்பட்டார்கள். பாடசாலைக் கல்வி மட்டும் போதுமானது என்ற நிலைப்பாட்டிலிருந்து முஸ்லிம் வாலிபர்களும் யுவதிகளும் பட்டப் படிப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பெருமையும் பதியின் கல்வித் திட்ட வெளிப்பாடாகும்.

காயிதே மில்லத்தின் கல்விக்கான பங்களிப்பு தொடர்பாக கதைக்கும்போது கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் வளர்ச்சியோடு தொடர்புபடுத்தியே உற்றுநோக்குவது பொருத்தமாகும். ஏனெனில் பதியுதீன் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஆராயும்போது அவரின் வாழ்க்கையின் பெரும் பகுதி கம்பளை ஸாஹிராவுடனே கழிந்துள்ளது. அன்னார் சர்வதேச ராஜதந்திரியாப் பணியாற்றும்போது அதாவது நியுயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதியாகக் கடமையாற்றும் வேளையில் தமது ஆசனத்தின் முன் வைக்கப்பட்டிருந்த இலங்கையின் பிரதிநிதி கலாநிதி பதியுதீன் மஹ்மூத் எனும் சுட்டிப் பெயர் பலகையில் முன்னால் கம்பளை ஸாஹிராவின் அதிபர் என்ற வார்த்தையும் பொறிக்கப்பட்டிருந்தது. கம்பளை ஸாஹிரா அவரின் உயிர் மூச்சு என்பதை உணர்த்துகிறது.

அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் புவியியல்துறை விரிவுரையாளராகப் பதவியேற்க இருந்த நிலையில் தான் கம்பளை ஸாஹிராவின் உப அதிபர் பதவியைப் பொறுப்பேற்கிறார்.

தனது அபிமான ஆசிரியர் ரீ.பி. ஜாயாவின் வேண்டுதலுக்கு அமைவாக 1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01ம் திகதி ஸாஹிராவின் உபஅதிபர் ஆசனத்தை அலங்கரிக்கிறார்.

1944 ஆம் ஆண்டில் கம்பளை டவுன் பள்ளிக்குச் சொந்தமான ஓலையால் வேயப்பட்ட ஒரு தற்காலிகக் கட்டிடத்தில் 167 மாணவர்களைக் கொண்டதே கம்பளை ஸ ாஹிராக் கல்லூரியாகும். அப்போது இப்பாடசாலை கொழும்பு ஸாஹிராவின் கிளையாகவே இயங்கியது. ஆனால், சொற்ப காலத்தில் பதியின் அயராத முயற்சியின் விளைவாக தனித்து இயங்கும் ஒரு பாடசாலையாக மாறுகிறது. அதன் நிலப்பரப்பை 4 ஏக்கராக விஸ்தரிக்கும் முயற்சியிலும் அவர் வெற்றி காணுகிறார்.

கம்பளையில் மட்டுமல்லாது அதனைச் சூழவுள்ள மக்களினதும் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களினதும் நன்மதிப்பையும் அன்புடன் கூடிய ஆதரவையும் திரட்டிய அதிபர் பதியுதீன் கம்பளையைச் சூழவுள்ள கிராமம் கிராமமாக சிலவேளைகளில் வீடு வீடாகச் சென்று, கல்வியின் அவசியத்தையும் இப்பகுதியில் தனித்துவமிக்க கல்லூரியொன்றைக் கட்டியெழுப்புவதன் தேவை பற்றியும் வலியுறுத்தி வந்தார்.

மாணவர் எண்ணிக்கை கூடுவதைப் போலவே பெண் மாணவிகளின் வருகையையும் அதிகரிக்கச் செய்ய பெண் மாணவிகளுக்கு ஒழுக்கமிகு சீருடையொன்றையும் அதிபர் அறிமுகப்படுத்துகிறார். கலாநிதி பதியுதீன் தனது முயற்சியை மேலும் தீவிரப்படுத்துகிறார்.

ஜும்ஆ நாட்களில் பள்ளிவாசல்களுக்குச் சென்று விளக்கமளித்தார். எதிர்காலத்தில் சமூகத்துக்குப் பயனுள்ள சிறந்த முஸ்லிம் கல்விமான்களை உருவாக்க வேண்டுமாயின் சகல வசதிகளுடன் கூடிய கல்லூரியொன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் கூறிவந்தார்.

அதிபர் கூஷபதிக்கு" பல்வேறு எதிர்ப்புகள் தோன்றிய போதிலும் அவர் அவற்றைத் துச்சமாக மதித்து தனது இலச்சியப் பயணத்தைத் தொடர்ந்தார்.

பௌதிக வளத் தேவைகள் ஏற்படும் வேளைகளில் வர்த்தகப் பிரமுகர்கள் மூலம் உதவி கிடைத்த வண்ணமிருந்தன. 60ம் ஆண்டில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கல்வி அசைச்சராகப் பதவியேற்றபோது ஸாஹிராக் கல்லூரியின் பொற்காலம் உருவானது. என்றாலும் ஸாஹிராவுக்கு வழங்கும் வசதிகள் போலவே தமிழ் சிங்களப் பாடசாலைகளின் குறைகளையும் நீக்கினார்.

கல்லூரிக்குத் தேவையான கற்றலுக்கான நவீன உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் முதலான வசதிகளையும் பெற்றுக்கொடுத்தது மட்டுமல்லாமல், அவரின் கனவுக்கேற்ப ஸாஹிரா வளவின் மலை உச்சியில் கம்பீரமான பள்ளிவாசலையும் அமைத்து, பாடசாலை நாட்களில் ஜும்ஆ தொழுகையையம் ஆரம்பித்து வைத்தார்.

இக்காலத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் முதலான மொழி மூல வகுப்புகள் நடத்தப்பட்டதால் முஸ்லிம்கள் மட்டுமல்லாது சிங்கள, தமிழ் மாணவர்களுக்கான கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

கல்லூரியின் ஆளணியில் முஸ்லிம்கள், சிங்களவர்கள், தமிழர்கள், மலாயர்கள், பறங்கியர்கள் மற்றும் இந்தியர்கள் ஆசிரியர்களால் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் போஷிக்கப்பட்டு வந்தன. ஒழுக்கத்தாலும் போஷக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உயர் தர வகுப்புகள் கலை, விஞ்ஞானம், வணிகம், தொழிநுட்பம் மற்றும் விவசாய விஞ்ஞானம் முலான பல்வேறு துறைசார்ந்த வகுப்புகளும் நடைபெற்றன. கல்வித் துறையிலும் சரி விளையாட்டுத் முதல் கலை இலக்கியத் துறையிலும் கொழும்பிலுள்ள முன்னணிப் பாடசாலைகளுடனே போட்டிகளில் ஈடுபட்டது.

இக்கல்லூரியின் பௌதிக வளர்ச்சியை உற்றுநோக்கினால் கூஷபதி" ஓர் அதிசய மனிதர் என்பது புலனாகும். 1944 ஆம் ஆண்டு முதல் 1960 வரையான சுமார் 15 வருட காலத்துக்குள் ஒரு ஓலைக் கொட்டிலில் ஆரம்பமாகி 15 வருடத்துக்குள பலமான மாடிகளுடன் கூடிய 22 கட்டிடங்களாக வளர்ச்சி காண வைத்துள்ளார். 1997, ஜுன் 16 ஆம் திகதி அல்லாஹ்வின் அழைப்பை ஏற்றார்.

அவர் மறைந்தாலும் அவர் அமைத்த விசாலாமான ஸாஹிராவும் நாடு பூராகவும் உள்ள ஆளுமைகளும் சமூகத்தை மேலும் முன்னேரச் செய்வதில் பங்களிப்புச் செய்யும் என்பது நமது நம்பிக்கையாகும்.

**தொகுப்பு: அல்ஹாஜ் ஹில்மி முஹம்மத்** (SLAS – Rt)
**முன்னாள் பணிப்பாளர் அரசாங்க தகவல் திணைக்களம்**
**ஆ.ர்.ஆ. நியாஸ்**
**முன்னாள் சமுர்த்தி திணைக்கள உயரதிகாரி,**
**பணிப்பாளர் இங்கை சமாதானப் பேரவை**

# சீனாவில் நடைபெறும் செயலமர்வில் இலங்கை பாராளுமன்ற தூதுக்குழுவினர் பங்கேற்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வொன்றில் கலந்துகொள்வதற்காக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தலைமையிலான இலங்கை பாராளுமன்றக் குழுவினர் சீன மக்கள் குடியரசுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

சீன மக்கள் குடியரசின் வணிக அமைச்சின் அனுசரணையுடன் சீனாவின் தேசிய அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கான சர்வதேச ஒத்துழைப்பு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த செயலமர்வு ஜூன் 20ஆம் திகதி முதல் ஜூலை 06ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

இலங்கை சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் பிரதிநிதிகளான ஆளும் கட்சி எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைந்துள்ளது.

இதில் ஆளும் கட்சி சார்பில் அமைச்சர் சுனில் குமார கமகே (குழுவின் தலைவர்), பாராளுமன்ற உறுப்பினர்களான சமன்மலி குணசிங்ஹ, (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திர, (லெப்டினன்ட் கேணல்) (ஓய்வு) பிரகீத் மதுரங்க, அஜித் கிஹான், கிருஷ்ணன் கலைச்செல்வி, தினுந்து சமன் ஏக்கநாயக்க, (சட்டத்தரணி) பாக்ய சிறி ஹேரத், அபூபக்கர் ஆதம்பாவா, அசோக குணசேன, தனுர திசாநாயக்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

எதிர்க்கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான கின்ஸ் நெல்சன், பி.ஆரியவன்ச மற்றும் (சட்டத்தரணி) அநுராத ஜயரத்ன ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

பதவியணித் தலைமையதிகாரியும், பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, பாராளுமன்ற செயலகத்தின் சிரேஷ்ட பாராளுமன்ற ஒழுங்குமரபு உத்தியோகத்தர் ரணில் நாயணக்கார, சபை முதல்வர் அலுவலகத்தைச் சேர்ந்த முகாமைத்துவ சேவை அதிகாரி திலினி துஷாரிகா கமகே ஆகிய அதிகாரிகளும் இந்தக் குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தச் செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜூன் 22ஆம் திகதி நடைபெற்றதுடன், இதில் சீனாவின் தேசிய அபிவிருத்தி மற்றும் மறு சீரமைப்பு ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சென் சுவாய், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கடந்த 23ஆம் திகதி சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைத் தூதுக் குழுவினர், தேசிய மக்கள் காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவின் பிரதித் தலைவரும், இலங்கை - சீன நட்புறவுக் குழுவின் பிரதித் தலைவருமான வங் கீ அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல்கள் சீனாவின் அபிவிருத்தி அனுபவங்கள் குறித்த தூதுக்குழுவின் புரிதலை மேம்படுத்துவதோடு, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை வளர்க்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கற்பிட்டி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம்





(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கற்பிட்டி பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்சினி ஏற்பாட்டில் குழுத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஜே.எம் பைசல் தலைமையில் (25) கற்பிட்டி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி, உல்லாசப் பயணத்துறை உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும், கற்பிட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பிரதேசத்தின் அபிவிருத்திகள் மற்றும் மக்கள் பிரச்சினைகள் என்பன கலந்துரையாடப்பட்டது.

மேற்படி ஒருங்கிணைப்பு அவையில் கற்பிட்டி பிரதேச சபை தலைவர் எம்.எஸ்.எம் றிகாஸ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டதோடு தேசிய மக்கள் சக்தியின் கற்பிட்டி பிரதேச அமைப்பாளர் நிமல் பத்திர கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகருக்கு கௌரவம்

(ரஷீத் எம். றியாழ்)



கண்டி கல்வி வலயத்திலும் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திலும் சிறந்த சேவையாற்றி (27) ஓய்வு பெறும் சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் எம். ஆர். எம் ரிஸ்னி கண்டியில் கௌரவிக்கப்பட்டார்

கண்டி சித்திலெப்பை கல்லூரியில் நடைபெற்ற நிகழ்விலேயே இவர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரி அதிபர் எம். ஏ.எம்.அலீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கடந்த 34 ஆண்டு காலமாக மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திலும் கண்டி கல்வி வலயத்திலும் பல பாடசாலைகளிலும் உடற்கல்வி, விளையாட்டுத்துறைக்காக இவர் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி பேசப்பட்டது.

இந்த நிகழ்வில் கண்டி சித்திலெப்பை கல்லூரியின் பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் பிரதேச சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வசம்





(கே. எ. ஹமீட்)

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்யும் கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் பொத்துவில் பிரதேச சபை மண்டபத்தில் (27) நடைபெற்றது.

இங்கு நடைபெற்ற தவிசாளர் வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் முன்மொழியப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஷர்ரப் ஏகமானதாக தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

உப தவிசாளர் பதவிக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஏ. மாபிர், தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்நத டீ.சுபோகரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

வாக்கெடுப்பில் டீ.சுபோகரன் 3 வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.மாபிர் ஆதரவாக 13 வாக்குகளைப் பெற்று சபையில் ஏகமனதாக உப தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, பொத்துவில் அமைப்பாளரும் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ்.வாசித், கட்சியின் மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.சி.சமால்தீன், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கண்டி சித்திலெப்பை கல்லூரியில் முஹர்ரம் புத்தாண்டு நிகழ்ச்சி

(ரஷீத் எம். றியாழ்)



முஹர்ரம் புத்தாண்டு நிகழ்வை முன்னிட்டு கண்டி சித்திலெப்பை கல்லூரியில் (28) விசேட முஹர்ரம் நிகழ்வுகள் நடைபெற்றன .

கல்லூரி அதிபர் எம்.எம்.ஏ அலீம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு கண்டி கல்வித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் எம் .ஆர் ரிஸ்னி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கண்டி கட்டுகலை ஜ/ம்ஆ மஸ்ஜித் கதீப் அஷ்ஷெய்க் இர்ஷாத் ரவாஹி முஹர்ரம் விசேட சொற்பொழிவை நிகழ்த்தினார்.

மாணவ மாணவிகளின் பல்வேறு கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன.

வலய மட்ட, மாகாண மட்டங்களின் பல்வேறு கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.

# சோழன் உலக சாதனை படைத்த 3 வயதுக் குழந்தை பவிஷ்





(இர்ஷாத் ரஹ்மதுல்லாஹ்)

150 பொது அறிவுக் கேள்விகளுக்கு விடையளித்தல், 50 சொற்களுக்கான ஒத்தச் சொற்கள், 50 சொற்களுக்கான எதிர்ச் சொற்கள் மற்றும் 30 சமஸ்கிருத சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் போன்றவற்றை மிகவும் குறைந்த நேரத்திற்குள் கூறி சோழன் உலக சாதனை படைத்த மட்டக்களப்பு மாவட்டம் கறுவேப்பங்கேணியில் வசித்து வரும் பிரசாத் மற்றும் ரம்யா ஆகியோரின் மகன் 3 வயதும் 6 மாதங்களுமான பவிஷ்.

இவர் 150 பொது அறிவுக் கேள்விகளுக்கான சரியான விடைகளை 4 நிமிடங்கள் மற்றும் 20 நொடிகளில் கூறினார். மேலும், 50 சொற்களுக்கான ஒத்தச் சொற்கள், 50 சொற்களுக்கான எதிர்ச் சொற்கள் போன்றவற்றை 2 நிமிடங்களில் கூறி முடித்து, 30 சமஸ்கிருத சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை கூறி சோழன் உலக சாதனை படைத்தார்.

குழந்தையின் முயற்சியை உன்னிப்பாகக் கண்காணித்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைச் செயலாளர் திரு.கதிரவன் த. இன்பராசா, மட்டக்களப்பு மாவட்டப் பொதுத் தலைவர் திரு.சிவ வரதகரன் மற்றும் செயற்குழு உறுப்பினர் கவிஞர்.திரு. தனுராஜ் போன்றோர் உலக சாதனையாகப் பதிவு செய்தனர்.

நடுவர்களுடன் இணைந்து சோழன் உலக சாதனை படைத்த குழந்தை பவிசுக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை மற்றும் பைல் போன்றவற்றை வழங்கிப் பாராட்டினார்கள்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் பீபல்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷனுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வை கதிரவன் சமூக அபிவிருத்திக் கழகம் ஒருங்கிணைத்து நடத்தியிருந்தது.

மபாஸ் சனூான்
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்



# ஈரான் இஸ்ரேல் மோதலில் மறைந்திருக்கும் சமயப் பின்புலம்

அனைத்து உலக நாடுகளும் தற்போது ஈரான் - இஸ்ரேல் யுத்தம் எந்தப் பக்கத்திற்கு திரும்பும் என்று கடும் அழுத்தத்தில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. உலகப் பொருளாதாரத்தில் இந்த யுத்தத்தின் தாக்கம் அதிர்ச்சி யானதாக இருக்கும் என்று ஊகிக்கப்படுவதே அதற்கான பிரதான காரணமாகும். கடந்த பன்னிரண்டாம் திகதி இஸ்ரேல் ஈரான் நாட்டின் மீது மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலே இந்த யுத்தத்திற்கான உடனடிக் காரணமாக இருக்கின்றது. பின்னர் இஸ்ரேலுக்குச் சார்பாக அமேரிக்கா ஈரானின் இஸ்பஹான் பிரதேசத்தை கடந்த 22ஆம் திகதி தாக்கியது. ஐக்கிய அமேரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் இந்த நடவடிக்கைக்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. குறிப்பாக ஈரான் யுரேனியச் செறிவாக்கலின் ஊடாக அணு ஆயுதத்தை உற்பத்தி செய்ய எத்தினிக்கின்றது என்கின்ற குற்றச்சாட்டு அதில் ஒரு காரணமாகும். ஈரான் அணு ஆயுதத்தை தயாரித்தால் அது மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று அமேரிக்காவின் தாக்குதலுக்குப் பின்னர் இஸ்ரேலின் அதிபர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார். இதனை ஆமோதிப்பதாக டிரம்ப்பின் உரைகளும் ஆங்காங்கே அமைந்தன. சர்வதேச ஊடகங்களில் வெளிவந்த கட்டுரைகளும் இந்தக் காரணத்துக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தன. அத்துடன் டிரம் ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வரை இந்த யுத்த நடவடிக்கை நிற்காது என்றும் ஈரானின் ஆட்சி அமைப்பின் மிக முக்கியமான, அடிப்படையான பதவியில் இருக்கும் இமாம் கொமெய்னியை ஈரான் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தினார். ஈரானின் வளர்ச்சிக்கும் ஈரானின் முயற்சிக்கும் மட்டுமல்ல 1979ஆம் ஆண்டு ஈரானில் நடந்த புரட்சிக்கும் பிரதான காரணம் இமாம் கொமெய்னி ஆகும். ஈரானில் ஆட்சி மாற்றத்தை எற்படுத்தி ஏற்கனவே அமேரிக்காவுக்கு சார்பாக இருந்த பாலவி மன்னர் ஆட்சியை ஈரானில் ஸ்தாபிப்பதற்கான கருத்தாடல்கள் வெள்ளை மாளிகையில் இடம்பெறுவதாகவும் அறியக் கிடைக்கின்றது. வெளித் தோற்றத்திற்கு அமைய இந்த யுத்தத்திற்கு இவ்வாறான காரணங்கள் சொல்லப்பட்டாலும் இந்த யுத்தத்திற்கு ஒரு சமயப் பின்புலம் இருக்கின்றது. அதனை வெளிப்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். டிரம்பும் நெதன்யாகுவும் தங்களது உரைகளில் பல சந்தர்ப்பங்களில் ஆழமாக கடவுளுக்கு நன்றி சொல்லுவதை அவதானிக்கலாம். கடவுளின் பெயரைக் கொண்டு உரைகளை ஆரம்பிப்பதையும் அவதானிக்கலாம்.

டெல்லவி, வாஷிங்டன், இலண்டன் இந்த மூன்றும் யூத கிறிஸ்தவ முக்கோண வலயங்களாகும். சியோனிஸ இஸ்ரேல் தங்களுக்கான ஒரு மெசியா (யூதத் தலைவர்) வருவதை எதிர்பார்த்ததாக இருக்கின்றது. அவர்களது சமய நம்பிக்கைகளுக்கு அமைய அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமியாக தற்போது இருக்கின்ற இஸ்ரேல் பகுதியை மாத்திரம் அது கருதவில்லை. மாறாக ஜோர்டான், ஈரான், பலஸ்தீன், ஈராக், சிரியா இந்த அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய இஸ்ரேல் இராச்சியத்தை நிறுவுவதே இஸ்ரேலின் திட்டமாக இருக்கின்றது. இஸ்ரேல் நாட்டின் கடந்த காலச் செயற்பாடுகளைப் பார்த்தால் இதனை நன்றாக ஊகித்துக் கொள்ளலாம். இஸ்ரவேலர்களின் மெசியா பற்றிய நம்பிக்கை அவர்களது இரத்தத்தில் ஊறிய ஒரு விசுவாசமாக இருக்கின்றது. யூத நம்பிக்கை களுக்கு அமைய இந்த மெசியா வெளிப்படுகின்ற போது இஸ்ரேல் இராச்சியத்தை உருவாக்கி இருக்க வேண்டும் என்பது இஸ்ரேல் அரசாங்கத்தின் திட்டமாகும். அதன் பின்னர் அடுத்த விடயங்களை மெசியா செய்வார். யூத வேத விளக்க நூல்களில் யூதர்களின் மெசியா வெளிப் படுகின்ற போது யூதர்களின் தலைவராக பெஞ்சமின் நெதன்யாகு என்பவர் இருப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது. (யூத ரபிக்களான இன்ஸத் கபூரி, ரபி மனேஸனி என்போரின் குறிப்புகளைப் பார்க்கவும்). இஸ்ரேலின் ஜனாதிபதி பெஞ்சமின் நெதன்யாகு ஒரு பாரம்பரிய யூத ரபி குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றார். கடந்த பதினான்கு ஆண்டுகளாக உலக அளவில் நடைபெற்ற விடயங்கள் இந்த யூத மெசியா வெளிப்படுவதற்கான முன்னறிவிப்புகளாக இருப்பதாக சியோனிஸ யூதர்கள் கருதுகின்றார்கள். இந்தப் பின்னணியில் இஸ்ரேலின் இந்த இலக்கை மத்திய கிழக்கில் அடைவதற்கான சவாலாக இருப்பது ஈரானாகும். இஸ்ரேலைச் சுற்றி இருக்கின்ற மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகள் அமேரிக்கா மற்றும் இஸ்ரேல் என்ற பாம்பாட்டியின் குழலுக்கு ஆடுகின்ற பல்லைப் பிடுங்கிய பாம்புகளாக இருப்பதை கடந்த நூறு வருட கால வரலாறு பறைசாற்றுகின்றது. ஆனால் ஈரான் இதற்கு மாற்றமானது. வலுக்கட்டாயமாக பலஸ்தீனின் ஒரு பகுதியை யூதர்கள் தமது நாடு என்று கைப்பற்றி சுதேச பலஸ்தீனியர்களுக்கு அநியாயம் இழைத்த போது பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் சரணகதி அற்றதாக இருந்தன. 1979ஆம் ஆண்டுக்குப் பின்னர் இமாம் கொமெய்னியின் தலைமையில் ஈரானில் ஸ்தாபிக்கப்பட்ட ஆட்சி அமைப்பு பலஸ்தீன இயக்கங்களுக்கு உடல், பொருள், ஆயுதம் என்று பலவகையிலும் உதவியது. பாலவி மன்னரின் ஆட்சியில் ஈரானில் இருந்த இஸ்ரேலியத் தூதரகம் பலஸ்தீன விடுதலை இயக்கமான பத்தாஹ் அமைப்புக்கு வழங்கப்பட்டது. ஈரானின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு பகுதி பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்காக ஒதுக்கப்படுகின்றது. கடந்த காலத்தில் நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன் யுத்தத்தில் மாஸ் அமைப்புக்கு ஈரான் பல வகையிலும் உதவி செய்தது யாரும் அறிந்த ஒரு விடயமாகும். அந்த யுத்தத்தில் ஈரானின் அனுசரணை பெற்ற ஹூதி மற்றும் ஹிஸ்புல்லா என்பவை ஹமாஸுக்குச் சார்பாக யுத்தத்தில் ஈடுபட்டன. இவ்வாறான பின்னணியில் மேற்கூறப்பட்ட இஸ்ரேலின் இலக்கை அடைவதற்கு இஸ்ரேலுக்குப் பெரும் தலை இடியாக இருப்பது ஈரானாகும். குறிப்பாக இமாம் குமெய்னியை அடிப்படையாகக் கொண்ட ஈரானின் ஆட்சி முறையாகும். மத்திய கிழக்கில் இஸ்ரேலின் இலக்கை இஸ்ரேல் அடைந்து கொள்ளுவதற்குத் தனியாக முடியாது. உலக சனத் தொகையில் யூதர்களின் சனத் தொகை வெறும் இரண்டு கோடியாகும். அவ்வளவு அரபு நாடுகளையும் தனது பொட்டடனிக்குள் வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு வல்லரசு இஸ்ரேலுக்குத் தேவை. அந்தத் தேவையை ஐக்கிய அமேரிக்கா நிவர்த்தி செய்கின்றது. இஸ்ரேல் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஐக்கிய அமேரிக்க இஸ்ரேலியச் சார்ப்பு நிலைப் பாத்திரத்தை இராஜ தந்திரமாக அரங்கேற்றியது. ஐக்கிய அமேரிக்காவை வல்லரசாக்கும் பின்னணியில் பாரிய பங்களிப்புகளை யூதர்கள் செய்துள்ளனர். ஐரோப்பாவில் ரோமானியக் கத்தோலிக்க சமயத்தில் இருந்து பிரிந்து சென்றோரே ஐக்கிய அமேரிக்காவில் குடியேறினர். இபிரித்தானியாவுக்கும் ஐக்கிய அமேரிக்காவுக்கும் நீண்ட காலமாகப் பகை நிலவியது. இந்தப் பகையை நீக்கி இந்த இரு நாடுகளையும் நட்பாக்கியது யூதர்களாகும். ஐக்கிய அமேரிக்காவில் ரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தைச் சாராத அதிகமான கிறிஸ்தவப் பிரிவுகள் உள்ளன. யூத ஆதிக்கத்தைக் கொண்ட பல கிறிஸ்தவ சமயப் பிரிவுகளும் இருக்கின்றன. அவ்வாறான ஒரு கிறிஸ்தவ சமயப் பிரிவைச் சார்ந்தவராக ஐக்கிய அமேரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம் இருக்கின்றார். அவரது சமயப் பிரிவு யேசு கிறிஸ்துவின் அல்லது ஈசா நபியின் இரண்டாவது வருகையை தீவிரமாக விசுவாசிக்கின்ற ஒரு பிரிவாகும். அந்த சமய நம்பிக்கைக்கு அமைய அந்த சமயப் பிரிவு இரண்டாவது முறையாக பூமிக்கு வருகின்ற யேசு கிறிஸ்துவை அல்லது ஈசா நபியை அனைத்து யூதர்களும் மெசியாவாக (யூதர்களின் தலைவராக) ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பதனையும் யுதர்களின் வாக்களிக்கப்பட்ட நிலம் என்ற யூத சிந்தனையையும் தீவிரமாக விசுவாசிக்கின்றது. அதற்கான வேலைகளையும் செய்கின்றது. மேலும் யூதர்கள் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு இனம் என்பதனையும் தீவிரமாக நம்புகின்றது. டொனால்ட் ட்ரம்ப்பின் இந்த விசுவாசத்தை தனக்குச் சார்பாக பெஞ்சமின் நெதன்யாகு பயன்படுத்துகின்றார். இதற்கு முன்னர் டொனால்ட் ட்ரம்ப் ஐக்கிய அமேரிக்காவின் அதிபராக இருந்த போது இஸ்ரேலின் தலை நகராக ஜெரூசலத்தை அறிவித்தார். ஐக்கிய அமேரிக்காவில் இதற்கு முன்னர் இருந்த அதிபர்கள் இந்தளவு தைரியமான ஒரு தீர்மானத்தை எடுக்கவில்லை. கடந்த இஸ்ரேல் - பலஸ்தீன் யுத்தத்தின் போது ஜோ பைடன் இஸ்ரேலுக்கு ஆயுதத்தை கொடுத்து உதவினாரே தவிர களத்தில் அமேரிக்கா இராணுவத்தை இறக்கவில்லை. ட்ரம்புக்கு முன்னர் இருந்த அமேரிக்கா அதிபர்கள் இஸ்ரேலுக்குச் சார்பாக இருந்தாலும் உலக மக்களையும் தமது கரிசனையில் கொண்டார்கள். ஆனால் டொனால்ட் ட்ரம் இஸ்ரேலுக்குச் சார்பாக இருப்பது மாத்திரமன்றி இஸ்ரேலை மாத்திரமே கரிசனை கொள்ளுகின்றார். இதற்கு அவர் விசுவாசிக்கும் சமயப் பிரிவின் மெஸியானிக் கோட்பாடு அடிப்படைக் காரணமாகும். ஈரான் - இஸ்ரேல் யுத்தத்திற்கு இவ்வாறான ஒரு சமயப் பின்புலம் இருக்கின்றது. ஈரானின் செயற்பாடானது மேற்கு றிப்பிடப்பட்ட யூத கிறிஸ்தவ மெஸியானிக் இலக்குக்கு தடையாக இருக்கின்றது.





அரபாத் பஹுர்தீன்

## வங்கதேசத்திற்கு எதிரான ஒருநாள் தொடர்
# இலங்கைக் குழாம் அறிவிப்பு

பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான சரித் அசலங்க தலைமையிலான 16 வீரர்கள் கொண்ட இலங்கை குழாம் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டது.
அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை குழாத்திலிருந்து கடைசியாக நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரிலிருந்து ஒருசில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அவுஸ்திரேலிய தொடருக்கான குழாத்தில் இணைக்கப்பட்டிருந்த நுவனிது பெர்னாண்டோ, வேகப்பந்து வீச்சாளர்களான மொஹமட் சிராஸ் மற்றும் லஹிரு குமார ஆகியோர் வாய்ப்பை இழந்துள்ளனர்.
இவர்களுக்கு பதிலாக மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் சதீர சமரவிக்ரமவுடன், வேகப்பந்துவீச்சாளர் மிலான் ரத்நாயக்க ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளனர்.
இதில் மிலான் ரத்நாயக்க பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது காயமடைந்தமையால் அவருடைய உடற்தகுதி தொடருக்கு முன்னர் பரிசோதிக்கப்பட்டு அதன் பின்னரே அவர் அணியில் இடம்பிடிப்பது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் என சுட்டிக்காட்டப்படடுள்ளது.
சரித் அசலங்க தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த குழாத்தில் பெதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், வனிந்து ஹஸரங்க, மஹீஷ் தீக்ஷ ன, ஜெப்ரி வெண்டர்சே மற்றும் அசித பெர்னாண்டோ ஆகிய முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.
அதேநேரம் இளம் வீரர்களான நிசான் மதுஷ்க, துனித் வெல்லாலகே, டில்ஷான் மதுசங்க மற்றும் எசான் மாலிங்க ஆகியோரும் வாய்ப்பினை பெற்றுள்ளனர்.
இலங்கை பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்று போட்டிகளும் பகலிரவு போட்டிகளாக எதிர்வரும் 2, 5 மற்றும் 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. முதல் இரண்டு ஒருநாள் போட்டிகள் ஆர்.பிரேமதாஸ மைதானத்திலும், மூன்றாவது ஒருநாள் போட்டி பல்லேகலையிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை குழாம்**

**சரித் அசலங்க (தலைவர்),
பெதும் நிஸ்ஸங்க,
அவிஷ்க பெர்னாண்டோ,
நிசான் மதுஷ்க,
குசல் மெண்டிஸ்,
சதீர சமரவிக்ரம,
கமிந்து மெண்டிஸ்,
ஜனித் லியனகே,
துனித் வெல்லாலகே,
வனிந்து ஹஸரங்க,
மஹீஷ் தீக்ஷன,
ஜெப்ரி வெண்டர்சே,
மிலான் ரத்நாயக்க,
டில்ஷான் மதுசங்க,
அசித பெர்னாண்டோ**

# அல் நாசரில் தொடருகிறார் ரொனால்டோ




போர்த்துகல் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ சவுதி புரோ லீக் கழகமான அல் நாசர் கழகத்துடன் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு வரை தனது ஒப்பந்தத்தை நீடித்துக் கொண்டுள்ளார்.
தற்கால உதைப்பந்தாட்ட உலகின் நட்சத்திர வீரரும், உலகின் மிக அதிகமான ரசிகர்களை தன்னகத்தே கொண்டவருமான ரொனால்டோ இக் கழகத்தில் இணைய முன்னர் இத்தாலியின் ஜுவெண்டஸ் கழகத்திற்காக விளையாடியிருந்தார்.
பின்னர் கடந்த இரு வருடத்திற்கு முன்னர் சவுதி புரோ லீக் கழகமாக அல் நாசர் கழகத்துடன் இரண்டு ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இக் கழகத்திற்காக பங்கேற்றிருந்தார்.
இந்நிலையில் ஜ/ன் 30ஆம் திகதியுடன் அல் நாசர் கழகத்துடனான ஒப்பந்தம் முடிவடையவிருந்த நிலையில், தற்போது புதிய மேலும் இரு வருட ஒப்பந்தத்தில் ரொனால்டோ கையெழுத்திட்டுள்ளார்.
ரொனால்டோ அல் நாசர் கழகத்தில் இருந்து இம்முறை வெளியேறுவார் என வதந்திகள் பரவிய நிலையில், அவர் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.
மேலும் ரொனால்டோ அல் நாசரில் இணைந்து அந்த அணிக்காக இதுவரை 111 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 99 கோல்களை அடித்துள்ளார்.
நடந்து முடிந்த சவுதி புரோ லீக் சீசனில் அல் இட்டிஹாட் மற்றும் அல் ஹிலாலுக்கு அடுத்த இடத்தில் மூன்றாவது இடத்தை அல் நாசர் கழகம் பிடித்திருந்தது.
இந்நிலையில், "ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது. அதே ஆர்வம், அதே கனவு, ஒன்றாக வரலாற்றை உருவாக்குவோம்" என்று கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது ஒப்பந்தத்தை புதுப்பித்த பிறகு சமூக ஊடகங்களுக்கு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியா செல்லும் இலங்கை ஏ அணியில் மொஹம்மட் சிறாஷ்



அஸ்திரேலியா 'ஏ' அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க வுள்ள இலங்கை 'ஏ' அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.
3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 2 நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் ஆகிய தொடர்களில் இலங்கை ஏ அணி அவுஸ்திரேலிய ஏ அணியுடன் விளையாடவுள்ளது. இதில் ஒருநாள் போட்டிகள் முறையே 4, 6 மற்றும் 9 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. மேலும் முதல் 4 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டி 13 ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையும், 2ஆவது போட்டி 20ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது. இப் போட்டிகள் அனைத்தும் டெர்பனில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
அத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை ஏ அணியின் ஒருநாள் அணிக்கு லஹிரு உதார அணியின் தலைவராகவும், 4 நாட்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு பசிந்து சூரியபண்டார தலைவராகவும் இலங்கை அணியை வழிநடாத்துகின்றனர்.
மேலும் இலங்கை தேசிய அணியில் இடம்பெற்ற வீரர்களான முஹம்மது சிராஸ், கமில் மிஷார, நுவணிந்து பெர்ணான்டோ, பவன் ரத்நாயக்க, செனால் டினூஷ பிரமோத் மதுஷான் ஆகியோர் இலங்கை ஏ அணியை பிரதிநிதித்துவம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

| One Day | Four Day Squad |
|---|---|
| 1. Kamil Mishara | 1. Lahiru Udara |
| 2. Lahiru Udara - **Captain** | 2. Kamil Mishara |
| 3. Lasith Croospulle | 3. Ravindu Rasantha |
| 4. Pasindu Sooriyabandara | 4. Pasindu Sooriyabandara - **Captain** |
| 5. Nuwanidu Fernando | 5. Nuwanidu Fernando |
| 6. Pavan Rathnayake | 6. Pavan Rathnayake |
| 7. Sahan Arachchige | 7. Vishad Randika |
| 8. Sonal Dinusha | 8. Sohan de Livera |
| 9. Chamindu Wickramasinghe | 9. Sonal Dinusha |
| 10. Shiran Fernando | 10. Shiran Fernando |
| 11. Isitha Wijesundara | 11. Isitha Wijesundara |
| 12. Pramod Madushan | 12. Asanka Manoj |
| 13. Mohamed Shiraz | 13. Mohamed Shiraz |
| 14. Dushan Hemantha | 14. Pramod Madushan |
| 15. Wanuja Sahan | 15. Wanuja Sahan |
| | 16. Nishan Peiris |

# மின்னொளி கரப்பந்தாட்ட தொடரில் கற்பிட்டி பவர்சேஜ் அணி சாம்பியன்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி யங் பிளயர்ஸ் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மின்னொளி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கற்பிட்டி மண்டலக்குடா பவர் சேர்ஜ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.
கடந்த இரண்டு நாட்களாக மின்னொளியில் இடம்பெற்று வந்த விலகல் முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 10 அணிகள் கலந்து கொண்டது.
இதில் முதல் நான்கு இடங்களை பெற்ற சம்மாட்டிவாடி கரப்பந்தாட்ட அணி, கண்டக்குழி லைமாஸ் அணி, கற்பிட்டி பவர் சேர்ஜ் அணி மற்றும் கற்பிட்டி யங் பிளயர்ஸ் அணி என்பன அரையிறுதிக்கு தகுதி பெற்றன இதில் முதல் அரையிறுதியில் கற்பிட்டி யங் பிளயர்ஸ் அணியை 2 – 0 கற்பிட்டி பவர் சேர்ஜ் அணி வெற்றி பெற்று முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதியில் சம்மாட்டிவாடி அணியினரை 2 – 1 என்ற கணக்கில் கண்டக்குழி லைமாஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.
மிகவும் பலம் பொருந்திய கற்பிட்டி பவர் சேர்ஜ் அணியும் கண்டக்குழி லைமாஸ் அணியும் மிகவும் பரபரப்பாகவும் உற்சாகத்துடனும் கடும் போட்டியாகும் காணப்பட்ட இறுதிப் போட்டியில் கண்டக்குழி லைமாஸ் அணியை 2 – 1 என்ற கணக்கில் கற்பிட்டி பவர் சேர்ஜ் அணி வெற்றி கொண்டு செம்பியன் கிண்ணத்தை சுவிகரித்து கொண்டது.





இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.